வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 18.10.2024 வெள்ளிக்கிழமை | இதழ் : 291 | பக்கங்கள் : 12

# புதிய அரசியல் யாப்பு விரைவில் வரும் அதுவரை மாகாணசபை முறை இருக்கும்



## மாகாணத் தேர்தலும் நடத்தப்படும் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவர்

### வவுனியாவில் கூறினார் பிமல் ரட்நாயக்க

வவுனியா, ஒக்ரோபர் 18

"நாங்கள் புதிய ஒரு அரசியல் யாப்பை விரைவாக கொண்டு வருவோம். அதனூடாக அனைவரது உரிமைகளும் பாதுகாக்கப்படும். அதுவரை மாகாணசபை முறைமையை பாதுகாப்போம்.அந்த தேர்தலும் நடத்தப் படும்."

- இவ்வாறு தெரிவித்தார் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தேசிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தருமான பிமல் ரட்நாயக்க.

அரசியல் கைதிகள் அனைவரும் விடுவிக்கப் படுவார்கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதித் தேர்தலுக்கு பின்னர் இந்தப் பகுதியில் எமக்கான ஆதரவாளர்கள் அதிகரித் துள்ளனர். இதே வேளை, தமிழ் மக்களின் அதிகாரப் 11

# நாடு முழுவதிலும் அரிசி தட்டுப்பாடு

## விலையும் அதிகரிப்பு

கொழும்பு, ஒக். 18

சந்தையில் தற்போது அரிசிக்குத் தட்டுப்பாடு நிலவிவருவதன் காரணமாக அரிசியின் விலை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரிசி ஆலை உரிமையாளர்கள் அரிசிக்கான விலையை அதிகரித்துள்ளமையினால் 11

# அனுபவம் உள்ளவர்களை பாராளுமன்றம் அனுப்புக!

## விசேட அறிக்கையில் ரணில்

கொழும்பு, ஒக். 18

நாடு தொடர்ந்து சவால்களை எதிர்நோக்கி வரும் நிலையில் பொருளாதார நெருக்கடிகளை நிர்வகிப்பதில் அனுபவமுள்ள பாராளுமன்ற வேட்பாளர்களை தெரிவு செய்யுமாறு முன்னாள் ஜனாதிபதியும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் 11

# பிரசித்தமான கொலைகள், கடத்தல்கள், ஊழல்கள் குறித்து மீளவிசாரணைகளை ஆரம்பிக்குமாறு சி.ஐ.டிக்கு பணிப்பு

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலர் தகவல்



கொழும்பு, ஒக். 18

இலங்கையில் கடந்த அரசாங்கங்களின் கீழ் இடம்பெற்ற குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை நிலைநாட்டுவதற்காக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கு மக்கள் ஆணை வழங்கியமையினால் அனைத்து குற்ற வழக்குகளும் மிக முக்கியமானவை என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரவி செனவிரத்ன தெரிவித்தார்.

இடைநிறுத்தி வைக்கப்பட்ட பிரசித்தமான கொலைகள், கடத்தல்கள் மற்றும் ஊழல் மோசடிகள் தொடர்பில் மீள விசாரணைகளை ஆரம்பிக்குமாறு பதில் பொலிஸ் மா அதிபர் குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு ஆலோசனைகளை வழங்கியுள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனை வெளிப் படுத்தியுள்ளார்.

தொக்கி நிற்கும் குற்ற வழக்குகள் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ரவி செனவிரத்ன இதனைத் தெரிவித்தார்.

கடந்த அரசாங்கங்களின் கீழ் இடைநிறுத்தி வைக்கப்பட்ட பிரசித்தமான கொலைகள், கடத்தல்கள் மற்றும் ஊழல் 11

# ஈஸ்டர் தாக்குதல் விசாரணை அறிக்கை தேவையானபோது வெளிப்படுத்தப்படும்

## கம்மன்பிலவுக்கு விஜித ஹேரத் பதிலடி

கொழும்பு, ஒக். 18

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையை தேவையான போது வெளிப்படுத்தத் தயார் என அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

எதிர் தரப்பினர் கூறுவதைப்போல விசாரணை அறிக்கையை நினைத்தபடி வெளியிடுவதற்கு இது ஒன்றும் குழந்தைகள் வைத்து விளையாடும் பொம்மை அல்ல எனவும் விஜித ஹேரத் சாடினார்.

கம்பஹா பிரதேசத்தில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை 11

# தீர்க்கப்படாத பிரச்னைகளை 24 மணி நேரமும் அறிவிக்க வசதி!

கொழும்பு, ஒக். 18

மக்கள் முகங்கொடுக்கும் தீர்க்கப்படாத பிரச்சினைகளை நேரடியாக அறிவிப்பதற்காக ஜனாதிபதி செயலகத்தினால் 3 தொலைபேசி இலக்கங்கள் 11

# பாராளுமன்றத் தேர்தலில் ஜோதிட கணிப்புகள் தடை

## தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பு

கொழும்பு, ஒக். 18

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தனிப்பட்ட வேட்பாளர்களுக்கு ஆதரவாக ஜோதிட கணிப்புகளைச் செய்வதை தவிர்க்குமாறு அனைத்து ஜோதிடர்களுக்கும் தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பு விடுத்துள்ளது.

இதுபோன்ற கணிப்புகளை வெளியிடுவது தேர்தல் சட்டப்படி கடுமையான குற்றமாகும் 11

# யாழில் நிமோனியா காய்ச்சலால் இளம் குடும்பப் பெண் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஒக். 18

நிமோனியா காய்ச்சலால் பாதிக்கப்பட்ட இளம் குடும்பப் பெண்ணொருவர் நேற்று உயிரிழந்துள்ளார். கோப்பாய் தெற்கு, வீரபத்திரர் கோயில் வீதியைச் சேர்ந்த காந்தீபன் சுதர்ஷினி (வயது 44) என்று குடும்பப் பெண்ணை இவ்வாறு உயிரிழந்துள்ளார். 11

# வியாழேந்திரன் சங்குக்கு ஆதரவு

மட்டக்களப்பு, ஒக். 18

சங்கு சின்னத்தில் போட்டியிடும் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணிக்கு இம்முறை தாம் ஆதரவு வழங்க தீர்மானித்துள்ளதாக முற்போக்கு தமிழர் கழகத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித் துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் 11

# புதிய கடன்களை பெறமாட்டோம்!

## ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர்

கொழும்பு, ஒக். 18

அமைச்சுகளின் செலவினங்களைச் சமாளிக்கவும், திறைசேரி பத்திரங்கள் மற்றும் பிணைமுறைகளை மீளச் செலுத்துவதற்கும் உள்ளூர் நிதிச் சந்தையில் இருந்து நிதி சேகரிக்கப்படுகிறதே தவிர புதிய கடன்களை பெறமாட்டோம் என ஜனாதிபதியின் பொருளாதார மற்றும் நிதி விவகாரங்களுக்கான சிரேஷ்ட ஆலோசகர் அனில் ஜயந்த தெரிவித்தார்.

ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

தமிழ் அரசு கட்சியின் தலைவர் தெரிவின்போது இந்தப் பத்தி - போட்டியிட்ட இருவரில் ஒருவருக்கு ஆதரவாக எழுதிவந்தது. அதற்கு காரணம் அவர் அந்தப் பதவிக்கு பொருத்தமானவர் என்பதற்காக அல்ல.

எழுபதுகளில் தமிழ் அரசு கட்சியும் தமிழ் காங்கிரஸ் கட்சியும் இணைந்துகொண்டு தமிழர் விடுதலைக் கூட்டணியை ஆரம்பித்த பின்னர், தமிழ் அரசுக் கட்சி கிடப்பில் போடப்பட்டது.

எழுபத்தி ஏழு தேர்தலில் கூட்டணியில் அங்கம் வகித்த தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவர் குமார் பொன்னம்பலத்திற்கு (கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தில் தந்தையார்) வட்டுக் கோட்டைத் தொகுதியை ஒதுக்கிக்கொடுக்க, அவரோ தனக்கு தனது தந்தை எப்போதும் போட்டியிட்ட யாழ்ப்பாணத் தொகுதிதான் வேண்டும் என்று அடம் பிடித்தார். அவரது கோரிக்கையை அப்போதைய கூட்டணியின் அதிகாரம் மிக்க தலைவராக இருந்த அமிர்தலிங்கம் ஏற்றுக் கொண்டிருக்கலாம். ஆனால் அவரோ தனது இளவல் என்று கருதிய யோகேஸ்வரனுக்கு கொடுப்பதற்காக யாழ்ப்பாணத்தை குமாருக்கு கொடுக்க மறுத்ததும், அவர் கூட்டணியிலிருந்து வெளியேறி தமிழ் காங்கிரஸ் சார்பில் யாழ்ப்பாணத் தொகுதியில் போட்டியிட்டு தோல்விகண்டதும் பழைய சங்கதிகள்தான்.

அதாவது எழுபத்தியேழு தேர்தலில் காங்கிரஸ் - தமிழ் அரசு சேர்ந்து உருவாக்கிய கூட்டணியில் உண்மையில் கட்சியாக தமிழ் அரசு மாத்திரமே இருந்தது. ஆனாலும் தமிழ் அரசு அப்போது உறங்க வைக்கப்பட்டது. இரண்டாயிரத்து நான்கு தேர்தலில் தமிழ் அரசு தூசிதட்டி எடுக்கப்படும் வரை அதற்கு யார் தலைவராக இருந்தார் என்பதே யாருக்கும் தெரியுமோ தெரியவில்லை. ஆவரங்கால் சின்னத்துரை தலைவராக இருந்ததாக ஞாபகம். இரண்டாயிரத்து நான்கு தேர்தலில் தமிழ் அரசு பயன்படுத்தப்பட்டபோதிலும் அது தமிழ் தேசியக் கூட்டமைப்பு தேர்தலில் போட்டியிடுவதற்கான கட்சியாக இருந்ததே தவிர, வேறு எதற்கும் பயன்படுத்தப்படவில்லை என்பதால் பின்னர் சம்பந்தன் அதன் தலைவராக இருந்தாலும் யுத்தம் முடியும்வரை யார் அதனை வழிநடத்தினார்கள் என்பது இரகசியமானதல்ல. யுத்தத்திற்கு பின்னரும் கூட தமிழ் அரசின் தலைவராக இருந்த சம்பந்தன் கூட்டமைப்பின் தலைவராக அறியப்பட்டாரே தவிர, தமிழ் அரசின் தலைவர் என்பது பெயரளவிலேயே இருந்தது. பின்னர் அதன் தலைவராக ஒரு தசாப்தமாக இருப்பவர் மாவை சேனாதிராசா. அவரது தலைமைத்துவ திறமை உலகறிந்தது. அத்தகைய ஒரு பதவிக்கான தேர்தலில் சிறிதரனும் சுமந்திரனும் "அடிபட்டபோது" யார் அதற்கு தகுதியானவர் என்ற கேள்வியே எழவில்லை. ஏனெனில் மாவை தலைவராக இருக்கலாம் என்றால், ஏன் யாரால் கூட முடியாது என்ற கேள்வி ஒவ்வொருவர் மனதிலும் எழுந்திருக்கலாம்.

சிறிதரன் தலைவர் பதவிக்கு போட்டியிட்டபோது, அவரிடமிருந்த ஒரேயொரு 'தகுதி' அதற்கு முன்னர் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் இரண்டு வேட்பாளர்களிடையே செய்துகொள்ளப்பட்ட எழுதாத உடன்படிக்கைதான்.

சுமந்திரன் தனக்கு ஏற்கனவே ஒப்புதல் தந்தார் என்று சிறிதரன் பொதுவெளியில் கூறியதை சுமந்திரன் இன்றுவரை மறுதலிக்கவில்லை.

இரண்டாயிரத்து இருபது பாராளுமன்ற தேர்தலில் சிறிதரனின் உதவியை - அதாவது விருப்பு வாக்கு விடயத்தில் நாடிப்பெற்ற சுமந்திரன், அதற்காக சிறிதரனை தலைவராக ஆக்குவதாக ஒப்புதல் அளித்ததாகவே கருதமுடிந்தது.

சிறிதரனுக்கு கட்சித் தலைவர் பதவி மீது ஆர்வம் ஏற்பட்டதே இதனால்தான் என்றும் கருத இடமுண்டு. அவர் தான் ஏமாற்றப்பட்டதாக பொதுவெளியில் கூறியதும், இந்த பத்தி அவரை ஆதரிக்க காரணமானது.

அதுவல்ல நாம் இன்று சொல்ல வருவது:

சிறிதரன் தலைவராக தெரிவான நாளிலிருந்து இன்று வரையான அவரது நடவடிக்கைகள் பற்றியே அண்மைய நாட்களில் சமூக வலைத்தளங்களில் பலரும் அவரை 'கிழித்து தொங்கவிட்டு' வருகின்றனர்.

அவற்றில் பெரும்பாலானவை நியாயமான தாக்குதல்கள் தான். தலைவராக தெரிவான நாட்களிலிருந்து அவரது ஒவ்வொரு நடவடிக்கையும் அவரது ஆளுமையை வெளிப்படுத்தி வருகின்றன என்றே பலரும் எழுதிவருகின்றனர். கடைசியாக பொதுவேட்பாளரை ஆதரிக்கின்ற விடயத்திலும் அவர் நேர்மையாக நடந்துகொண்டாரா என்ற கேள்வி அதில் முக்கியமானது. பொதுவெளியில் பொது வேட்பாளருக்கு ஆதரவாக பேசிய அவர் அதனை இதயசுத்தியுடன் செய்தாரா என்பது இன்றும் கேள்விக்குரியது.

ஜனாதிபதி தேர்தலில் தமிழ் அரசு ஆதரித்த வேட்பாளருக்கே கிளிநொச்சியில் அதிக வாக்குகள் கிடைத்தன என்றும், எனவே சிறிதரனை கிளிநொச்சி மக்கள் நிராகரித்து விட்டனர் என்றும் சிலர் எழுதி வருகின்றனர்.

ஆனால் கிளிநொச்சியில் சிறிதரனின் தேர்தல் பிரசார யுக்தியே வித்தியாசனமானது. இருபது தேர்தலில் சுமந்திரனை அன்ரன் பாலசிங்கம் என்று பொதுவெளியில் கிலாகித்து கூறியபோதிலும் அவருக்கு கிளிநொச்சி மக்கள் தமது விருப்பு வாக்கை வழங்கி விடக்கூடாது என்பதிலும் அவர் கவனமாக இருந்தார். சுமந்திரனுக்கு கிளிநொச்சியில் கிடைத்த விருப்பு வாக்குகள் அதனை புலப்படுத்தின. எனவே அவர் கிளிநொச்சி மக்களை சங்குக்கு வாக்களிக்க பழக்கப்படுத்தக்கூடாது என்பதிலும் அவர் கவனமாக இருந்தாரா என்பது தெரியவில்லை.

என்னதான் இருந்தாலும், இன்று சமூகவலைத்தளங்களில் சிறிதரனை கிழித்து தொங்கப் போடுபவர்கள் யார் என்று பாத்தால், முன்னர் சுமந்திரனுக்காக எழுதிக்கொண்டிருந்தவர்கள்தான். ஆனாலும் அவர்கள் முன்வைக்கின்ற குற்றச்சாட்டுக்கள் குறித்து சிறிதரனும் அமைதியாக இருப்பது அவர் அவற்றை ஏற்றுக்கொள்வதாகவே தெரிகின்றது.!

**- ஊர்க்குருவி**

# கிளிநொச்சி நிதி செயல்பாட்டு முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்

*கிளிநொச்சி, ஒக். 18*

கிளிநொச்சி மாவட்ட நடப்பாண்டின் மூன்றாம் காலாண்டுக்கான நிதி செயல்பாட்டு முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட செயலக கணக்குக் கிளையின் ஏற்பாட்டில் பதில் அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் மாவட்ட செயலக பிரதம கணக்காளர் க. சி. கஜேந்திரன் மாவட்டத்தின் நிதி விடயங்கள் தொடர்பில் விளக்கமளித்தார்.

தொடர்ந்து, மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுடன் இணைந்த திணைக்களங்களின் நிதிச் செலவீன தலைப்புகளின் கீழ் கிடைக்கப் பெற்ற ஒதுக்கீடுகள், அவற்றின் தற்போதைய நிதிச்செயல்பாட்டு நிலைகள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர்கள், உதவித் திட்டமிடல் பணிப்பாளர்கள், கணக்காளர்கள், திணைக்களங்களின் மாவட்ட இணைப்பாளர்கள், விடயத்துக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக கணக்குக் கிளை உத்தியோகத்தர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (எ)

# பல்கலைக்கழகத்துக்கு தெரிவான மாணவர்கள் யாழில் கௌரவிப்பு

*யாழ்ப்பாணம், ஒக். 18*

யாழ்ப்பாணத்தில் வர்த்தகப் பிரிவில் 2023ஆம் ஆண்டு க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகிய மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு நேற்றையதினம் நடைபெற்றது.

விடியல் அமைப்பினால் இந்த கௌரவிப்பு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எதிர்காலத்தில் க. பொ. த. உயர்தரப் பரீட்சை எழுதவுள்ள ஏனைய மாணவர்களுக்கும் உற்சாக மூட்டும் வகையில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

இதன்போது, பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகிய மாணவர்களுக்கு பதக்கங்கள் அணிவித்து வெற்றிக் கிண்ணங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.




இதில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக மனிதவள முகாமைத்துவ பிரிவுக்குப் பொறுப்பான பேராசிரியர் ரொபின்ஸன் கலந்துகொண்டதுடன், ஆசிரியர்களான எஸ். பிரதீபன், ஆர். தர்சன், திருக்குமாரன் ஆகியோரும், சட்டத்தரணிகளான சுரேக்கா, உஷாந்தினி ஆகியோரும் விடியல் அமைப்பினரும் மாணவர்களும் கலந்து கொண்டனர். (எ-05)

# அற்றோனித் தத்துவத்தை பயன்படுத்தி மோசடியில் ஈடுபட்ட இருவர் சிக்கினர்!

*யாழ்ப்பாணம், ஒக். 18*

யாழ்ப்பாணத்தில் வெளிநாட்டில் வசிக்கும் நபருடைய அற்றோனித் தத்துவத்தைப் பயன்படுத்தி மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இருவரை பொலிஸார் கைது செய்தனர்.

கனடாவில் வசிக்கும் நபர் ஒருவர் மானிப்பாய் பகுதியிலுள்ள தனது ஆதனங்கள் சிலவற்றுக்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவருக்கு தனது அற்றோனித் தத்துவத்தை வழங்கியிருந்தார்.

குறித்த நபர் தனக்கு அற்றோனித் தத்துவத்தில் வழங்கப்படாத அதிகாரத்தை பயன்படுத்தி மேலும் சில ஆதனங்களை மோசடியாக உரிம மாற்றம் செய்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

இந்த நிலையில் இது தொடர்பில் பாதிக்கப்பட்ட கனடாவை சேர்ந்த நபர் யாழ். மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார். முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து இருவரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தினர். அவர்களை பிணையில் விடுவிக்க நீதிமன்று அனுமதி வழங்கியது.

# சர்வதேச உதைபந்தாட்ட போட்டியில் கிளிநொச்சி சிறுவர்கள் பங்கேற்பு

*கிளிநொச்சி, ஒக். 18*

வியட்நாமில் நடைபெறும் சர்வதேச உதைபந்தாட்ட போட்டியில் பங்கேற்கும் இலங்கை அணியில் கிளிநொச்சி மாவட்ட சிறுவர்கள் மூவர் இடம்பிடித்துள்ளனர்.

வியட்நாமில் சர்வதேச உதைபந்தாட்ட போட்டி மூன்று தினங்கள் நடைபெறவுள்ளன. இதில் 12 மற்றும் 15 வயதுக்குட்பட்ட அணிகளில் கிளிநொச்சியைச் சேர்ந்த மூன்று வீரர்கள் இடம்பிடித்துள்ளனர்.

15 வயதுக்குட்பட்ட 'ஏ' அணிக்கு கிளிநொச்சி ஈகிள் ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் வீரர் ரா. யதுசன் தலைமை தாங்குகின்றார்.

அதேபோன்று 15 வயதுக்குட்பட்ட "ஏ" அணியில் கிளிநொச்சி வீரர் ஒருவரும் 12 வயதுக்குட்பட்ட அணியில் கிளிநொச்சி வீரர் ஒருவரும் இடம்பிடித்துள்ளனர். இந்த உதைபந்தாட்ட போட்டி எதிர்வரும் 19, 20, மற்றும் 21 ஆம் திகதிகளில் வியட்நாமில் நடைபெறவுள்ளன.

(எ)

# தையிட்டி விகாரைக்கு எதிராக போராட்டம்!

*யாழ்ப்பாணம், ஒக். 18*

யாழ். தையிட்டியில் அமைந்துள்ள சட்டவிரோத திஸ்ஸ விகாரைக்கு எதிராக தொடர் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில், நேற்று முன்தினமும் நேற்றும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.



சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்டுள்ள தையிட்டி திஸ்ஸ விகாரையை அகற்றுமாறு கோரி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர், மக்களுடன் இணைந்து தொடர்ச்சியாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தப் போராட்டமானது, ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (எ- 05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
18.10.2024 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 01

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## மாற்றம் என்ற மாயை?

தேசிய மக்கள் சக்தியின் தலைமைத்துவ கட்சியான ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி) இலங்கையின் தேசிய இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கு இதுகாலவரையில் முன்னெடுக்கப்பட்ட சகல முயற்சிகளையும் எதிர்த்த ஒரு வரலாற்றைக் கொண்டிருக்கிறது.

பண்டா - செல்வா ஒப்பந்தமும் டட்லி - செல்வா ஒப்பந்தமும் செய்துகொள்ளப்பட்ட வேளைகளில் ஜே.வி. பி. தோன்றியிருக்கவில்லை. ஜே.ஆர். ஜெயவர்த்தன அரசாங்கம் 1981 ஆம் ஆண்டில் கொண்டுவந்த மாவட்ட அபிவிருத்தி சபை தொடக்கம் இந்தியாவின் தலையீட்டையடுத்து அதே ஜெயவர்த்தன அரசாங்கம் 1987 ஆம் ஆண்டில் கொண்டுவந்த மாகாணசபை வரை சகல தீர்வு முயற்சிகளையும் ஜே.வி.பி. எதிர்த்தது. அதன் அரசியல் அகராதியில் அதிகாரப் பரவலாக்கலுக்கு இடமிருந்ததில்லை.

ஆனால், கடந்த மாதம் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் அநுரகுமார திஸநாயக்க வெற்றிபெற்று பதவிக்கு வந்த பிறகு இனப்பிரச்னை தொடர்பில் தேசிய மக்கள் சக்தியின் குறிப்பாக ஜே வி.பி.யின் நிலைப்பாட்டில் ஓரளவுக்கேனும் நெகிழ்ச்சித் தன்மை ஏற்படக்கூடும் என்று எதிர்பார்த்தவர்களுக்கு "இல்லை, இல்லை. எங்களிடம் அது விடயத்தில் எந்த மாற்றத்தையும் எதிர்பார்க்காதீர்கள்" என்று சொல்வதைப் போன்று ஜே.வி.பி.யின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா இவ்வார முற்பகுதியில் தனியார் தொலைக்காட்சி சேவையொன்றில் அரசியல் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் கருத்துக்களை வெளியிட்டார்.

அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தம் தமிழ் மக்களுக்கு தேவையில்லை. தமிழ் அரசியல்வாதிகள்தான் தங்களது அதிகாரத்தை தக்கவைப்பதற்கு அதைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்று அவர் கூறினார். ஜனாதிபதி திஸாநாயக்கவை பதவிக்கு கொண்டு வந்ததன் மூலம் தென்னிலங்கை மக்கள் ஏற்படுத்தியிருப்பதாகக் கூறப்படும் மாற்றத்தில் தங்களது அபிலாசைகளுக்கு எந்தளவுக்கு இடமளிக்கப்படும் என்பதில் தமிழ் மக்களுக்கு ஏற்கனவே இருந்து வருகின்ற ஐயுறவை வலுப்படுத்தும் வகையில் ரில்வின் சில்வாவின் கருத்துகள் அமைந்திருக்கின்றன.

ஊழல்வாதிகளையும் இனவாதிகளையும் அரசியலில் இருந்து ஒதுங்கவைப்பதில் தாங்கள் வெற்றி கண்டிருப்பதாக ஜே.வி.பி.யின் பல தலைவர்கள் அண்மைய நாட்களில் கூறினார்கள். இனவாதிகள் அரசியலில் இருந்து ஒதுங்கினால் மாத்திரம் போதாது. அந்த இனவாதிகள் சிங்கள மக்கள் மத்தியில் விதைத்த தவறான சிந்தனைகளும் இல்லாமல் போனால்தான் ஜே.வி.பி. தலைவர்கள் உரிமை கோருகின்ற வெற்றியில் அர்த்தமிருக்க முடியும்.

ஆனால், தமிழ் மக்கள் 13ஆவது திருத்தத்தை கேட்கவில்லை என்பதும் தமிழ் அரசியல்வாதிகளே அதைப்பற்றி பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்பதும் ரில்வின் சில்வா புதிதாகக் கண்டுபிடித்த ஒன்றல்ல. தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளில் குறைந்த பட்சமானவற்றைக்கூட ஏற்றுக்கொள்ளாத சிங்கள இனவாதிகள் நீண்டகாலமாக செய்துவரும் ஒரு பிரசாரம்தான்.

மாற்றத்தையும் புதிய அரசியல் கலாசாரத்தையும் தோற்றுவிக்கப் போவதாக சூளுரைத்து ஆட்சிக்கு வந்திருக்கும் தேசிய மக்கள் சக்தியும் அதே இனவாதிகளின் கருத்துக்களிலேயே ஆழக்காலூன்றி நிற்பதாக இருந்தால் மாற்றம் என்பது உண்மையில் ஒரு மாயையே தவிர வேறு ஒன்றுமில்லை.

கூடைப்பந்தாட்டப் போட்டியில் 2ஆம் இடம்

## திருக்குடும்ப கன்னியர்மடம் அணிக்கு யாழ்ப்பாணத்தில் அமோக வரவேற்பு

யாழ்ப்பாணம், ஒக். 18

அகில இலங்கை ரீதியில் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட கூடைப்பந்தாட்டப் போட்டியில் இரண்டாம் இடத்தை பெற்றுக்கொண்ட யாழ். திருக்குடும்ப கன்னியர்மட அணிக்கு அமோக வரவேற்பளிக்கப்பட்டது.

கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் இந்தப் போட்டி நடத்தப்பட்டது. இதில் 17 வயது பிரிவில் பம்பலப்பிட்டி திருக்குடும்ப கன்னியர் மடம் அணியுடன் இறுதிப் போட்டியில் மோதிய யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் அணி தோல்வியடைந்தது. இருப்பினும் இந்தத் தொடரில் 2ஆம் இடத்தை பெற்றுக்கொண்டது.

இதன் மூலம் வட மாகாண பாடசாலை ஒன்று 17 வயது பிரிவில் முதல் முறையாக தேசிய ரீதியில் 2 ஆம் இடத்தை பெற்றுக் கொண்ட சந்தர்ப்பமாக இது பதிவாகியது.



யாழ். திருக்குடும்ப கன்னியர் மட அணிக்கு தனுஷ் ராஜசோபனா பயிற்றுவிப்பாளராக கடமையாற்றினார்.

இந்த நிலையில் யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் அணிக்கான கௌரவிப்பு நிகழ்வு பாடசாலை சமூகத்தினரால் யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்றது.

பாடசாலை அதிபர் மரிய சீலி மரியதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சென்பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் அருட்தந்தை திருமகன், வடமாகாண உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ராஜசீலன், யாழ்ப்பாண வலய உடற்கல்வி உதவிக் பணிப்பாளர் சாரங்கன், ஆசிரிய ஆலோசகர் சசிகுமார், யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கச் செயலாளர் யசிந்தன், யாழ்ப்பாணம் பிரதேச செயலக விளையாட்டு அமைச்சின் உத்தியோகத்தர், அருட் சகோதரி லுமினா உள்ளிட்ட பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், கல்வி சாரா உத்தியோகத்தர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(எ-05)

35 மில்லியன் ரூபாய் செலவில்

## இரணைமடுக் குளத்தின் இடது கரை நீர் விநியோக வாய்க்கால் சீரமைப்பு

கிளிநொச்சி, ஒக். 18

கிளிநொச்சி, இரணைமடுக் குளத்தின் இடது கரை நீர் விநியோக வாய்க்கால் சீரமைப்புப் பணிகள் 35 மில்லியன் ரூபாய் செலவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தின் பெரும் நீர்ப் பாசன குளமான இரணைமடுக் குளத்தின் முரசுமோட்டை, ஊரியான், உருத்திரபுரம், பெரிய பரந்தன் அகிய பிரதேசங்களுக்கான இடது கரை நீர் விநியோக வாய்க்காலின் நீர் திறந்து விடப்படும் துலுசுப் பகுதியில் ஏற்பட்டிருந்த நீர்க்கசிவைத் தடுக்கும் வகையிலான சீரமைப்புப் பணிகள் தற்பொழுது முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதன் கட்டுமானப் பணிகள் மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் 35 மில்லியன் ரூபாய் செலவில் முன்னெடுக்கப்பட்டு வருவதாக நீர்ப் பாசன பொறியியலாளர் பிரகாஷ் தெரிவித்தார்.

சிறுபோக செய்கை அறுவடையின் பின்னர் இந்தக் குளத்தினுடைய குறித்த புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி திருவையாறு ஏற்று நீர்ப் பாசனத் திட்டத்துக்குப் பாதிப்பு ஏற்படாத வகையிலும் ஏனைய நீர்விநியோக நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலும் இந்தப் புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

புனரமைப்புப் பணிகள் எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் நிறைவுறுத்தப்படவுள்ள தாகவும் நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

(எ)

## விக்னேஸ்வரா கல்லூரியின் பரிசளிப்பு தினம்

வடமராட்சி, ஒக். 18


கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் பரிசளிப்பு தினம் நாளை 19 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் பி. அரவிந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மூளை நரம்பியல் மருத்துவ நிபுணர் எஸ். பி. ஆதித்தன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக பருத்தித்துறை நகர சபை அபிவிருத்தி உத்தியோகத்தர் இ. சேந்தன் கலந்து கொள்வார். நிறுவுநர் தின உரையை யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா நிகழ்த்துவார். பரிசில்களை சிறீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக மருத்துவபீட உயிர் இரசாயனவியல் பேராசிரியர் திருமதி லோகினி ஆதித்தன் வழங்குவார்.

(எ-02)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒக்ரோபர் - 18 வெள்ளிக்கிழமை
குரோதி வருடம் - ஐப்பசி 01
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : திதித்துவயம்




**மேடம்**
கணவன் - மனைவிக்குள் வீண் விவாதம் வந்து செல்லும். உத்தியோகத்தில் மறைமுக பிரச்னைகள் வந்து விலகும். வியாபாரத்தில் கடினமாக உழைத்து லாபம் பெறுவீர்கள். எதிலும் கவனம் தேவை.

**இடபம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். உத்தியோகத்தில் பாராட்டப்படுவீர்கள். வியாபாரத்தில் புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி அடையும். சிறப்பான நாள்.

**மிதுனம்**
தவறு செய்பவர்களை தட்டிக் கேட்பீர்கள். பழைய கடன் பிரச்னை கட்டுப்பாட்டிற்குள் வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவால் நினைத்ததை முடிப்பீர்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**கடகம்**
கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். அழகும் இளமையும் கூடும். வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக்கொடுத்து வேலை வாங்குவீர்கள். இழந்த உரிமையை பெறுவீர்கள்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் திடீர் திடீரென்று எதையோ இழந்ததைப் போல் இருப்பீர்கள். சின்ன சின்ன இடர்பாடுகளை சமாளிக்க வேண்டியது வரும். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும்.

**கன்னி**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி மதிப்பார். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**துலாம்**
சாமர்த்தியமாகவும் சாதுர்யமாகவும் பேசி சாதிப்பீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் உங்களுக்கு முன்னுரிமை தருவார்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும்.

**விருட்சிகம்**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகளின் உயர்கல்வி உத்தியோகம் குறித்து யோசிப்பீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். கனவு நனவாகும் நாள்.

**தனுசு**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். நீண்ட நாட்களாக தள்ளிப் போன காரியங்கள் முடியும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**மகரம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். நினைத்ததை முடிக்கும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். புது நட்பு மலரும். வியாபாரத்தில் சந்தை ரகசியங்களை தெரிந்துக் கொள்வீர்கள். பணிகளை விரைந்து முடிப்பீர்கள். தடைகள் உடைப்படும் நாள்.

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒருவித படபடப்பு வந்து செல்லும். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் பணிப்போர் வந்து நீங்கும். இடம், பொருள், ஏவல்அறிந்து செயல்பட வேண்டிய நாள்.

# யாழில் மூன்றாம் காலாண்டிற்கான நிதி முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்





யாழ்ப்பாணம், ஒக். 18

மூன்றாம் காலாண்டிற்கான நிதி முன்னேற்ற மீளாய்வுக் கூட்டமானது யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது கருத்து தெரிவித்த பதில் அரசாங்க அதிபர், இக் கூட்டத்தின் நோக்கமானது நிதி முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாடுகள் சரியான முறையில் பின்பற்றப்படுகின்றதா என்பதனை ஆராய்வதும், நிதி முன்னேற்றங்களை மீளாய்வு செய்வதாகவும் தெரிவித்ததுடன், இவ் மீளாய்வுக் கூட்டத்தில் நிதி முன்னேற்றங்களை ஆராய்ந்த வகையில் திருப்திகரமாகவிருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் (காணி), திட்டமிடல் பணிப்பாளர், பிரதம பொறியியலாளர், கணக்காளர் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

(எ-05)

# பருத்தித்துறை பிரதேச பண்பாட்டு பெருவிழா

வடமராட்சி. ஒக். 16

பருத்தித்துறை பிரதேச செயலக பண்பாட்டுப் பெருவிழா, வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் பிரதேச செயலர் சிவபாதசுந்தரம் சத்தியசீலன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

விருந்தினர்களுக்கு மாலை அணிவித்து பருத்தித்துறை ஓராம் கட்டை சந்தியிலிருந்து விழா மண்டபம் வரை அழைத்து வரப்பட்டனர் அவர்களை தொடர்ந்து மாணவர்கள், பிரதேச கலைஞர்களின் இன்னியம், சிலம்பம், காவடி, கரகம், தவில், உடுக்கடி என்பன இடம்



பெற்றதனை தொடர்ந்து கடல் வளம், பனை வளம், தமிழரின் பாரம்பரியம், தொல்பொருள் சின்னங்கள், விவசாயம் போன்ற ஊர்திகளும் காட்சிக்கு பவனியாக வந்தன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் சிறி சற்குணராசா கலந்து சிறப்பித்தார்.

(எ-02)

# விபத்தில் காயமடைந்த முதியவர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஒக்.18

மோட்டார் சைக்கிள் - துவிச்சக்கர வண்டி விபத்தில் சிக்கி படுகாயமடைந்த முதியவர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். மன்னார் பேசாலை பகுதியைச் சேர்ந்த துரைச்சாமி கணபதி (வயது- 74) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

இவர் கடந்த 2ஆம் திகதி பேசாலை - மன்னார் வீதியால் தனது வீட்டை நோக்கி துவிச்சக்கர வண்டியில் பயணித்துக் கொண்டிருந்தார். இதன் போது எதிர்த்திசையில் வந்த மோட்டார் சைக்கிள் அவர் மீது மோதி விபத்து சம்பவித்தது.

இந்த நிலையில் அவர் மன்னார் - பேசாலை மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து மன்னார் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இருப்பினும், சிகிச்சை பலனின்றி அவர் நேற்று முன்தினம் உயிரிழந்தார். திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் உடற்கூற்று பரிசோதனைகளை மேற்கொண்ட பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

(எ-05)

# ஏழு லீற்றர் கசிப்புடன் யாழில் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், ஒக். 18

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அராலி பகுதியில் கசிப்புடன் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிக்கு கீழ் இயங்கும் யாழ். மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையிலேயே இவர் கைது செய்யப்பட்டார்.

அராலித்துறை பகுதியில் நீண்ட நாட்களாக இந்த நபர் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டு வருவதாக இரகசிய தகவல்



ஒன்று பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்றது.

இந்த நிலையில் சுற்றிவளைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்ட போது சந்தேகநபரின் வீட்டிலிருந்து ஏழு லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டது. இவ்வாறு மீட்கப்பட்ட கசிப்புடன் சந்தேகநபர் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் பொலிஸார் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை கொண்டு வருகின்றனர்.

(எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் சர்வதேசக் கொள்கை உறுதியாக இருக்கவேண்டும்!

## எரான் விக்ரமரத்ன வலியுறுத்து

கொழும்பு, ஒக். 18

**தேர்தலை காரணம் காட்டி சர்வதேச அரங்குகளில் இடம்பெறும் மாநாடுகளுக்கு சமூகமளிக்காமல் இருப்பது பொருத்தமற்ற விடயமாகும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.**



கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைகள் பேரவையினால் மாநாட்டில் அரசாங்கம் பங்கு கொள்ளவில்லை. தேர்தலை காரணம் காட்டி சர்வதேச அரங்குகளில் இடம்பெறும் மாநாடுகளுக்கு சமூகமளிக்காமல் இருப்பது பொருத்தமற்ற விடயமாகும்.

ஜனாதிபதியால் சமூகமளிக்க முடியாத பட்சத்தில் குறைந்த பட்சம் விடயதானங்களுக்கு பொறுப்பான அமைச்சரேனும் அந்த மாநாடுகளுக்கு செல்ல வேண்டும். அதேபோன்று மனித உரிமைகள் பேரவையில் அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளமைக்கு அமைய நாட்டினுள் ஒருமைப்பாடு மற்றும் பொறுப்புக்கூறலை உரியவாறு நிறைவேற்ற வேண்டியது அவசியமாகும். நாடு என்ற வகையில் உறுதியான வெளிநாட்டுக்கொள்கை பின்பற்றப்படவேண்டும்.

அதேபோன்று பிரிக்ஸ் மாநாட்டில் நாம் நிச்சயம் பங்கு கொள்ள வேண்டும். ஏனெனில் எமது நாடு பிரிக்ஸ் நாடுகளின் அங்கத்துவத்தை பெற உள்ளது. ஆகவே நிச்சயம் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு அரசாங்கத்திடம் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம்-என்றார். (அ)

# அரச ஊழியர்களை ஏமாற்றியுள்ள அரசு

## ரஞ்சித் மத்தும பண்டார குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 18

அரசாங்கம் அரச ஊழியர்களை ஏமாற்றியுள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் மக்களுக்கு தேர்தல் பிரசார காலத்தில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றியதாக தெரியவில்லை. நாட்டு மக்களுக்கு வாழத் தகுந்த நாட்டை உருவாக்குவோம் என கூறினர். ஆனால் சர்வதேச நாணய நிதிய விடயத்தில் அதன் நிபந்தனைகள் மாற்றியமைக்கப்படும் என அரசாங்கம் கூறியது. ஆனால் நாணய நிதிய பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் போது எந்தவித மாற்றங்களும் ஏற்படுத்தப்படவில்லை.

அதேபோன்று அரச ஊழியர்களில் 80 வீதமானவர்கள் தேசிய மக்கள் சக்தியினருக்கு ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்தனர். ஆனால் அரசாங்கம் அவர்களுக்கு வழங்கியுள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றியதாக தெரியவில்லை. இவ்வாறாக அரசாங்கம் அரச ஊழியர்களை ஏமாற்றியுள்ளது-என்றார்.

# அமைதியின் மதிப்பை நாம் ஒருபோதும் மறக்கக்கூடாது

## பாதுகாப்பு செயலாளர் கருத்து

கொழும்பு, ஒக். 18

அமைதியின் பெறுமதியை ஒருபோதும் மறந்துவிக்கூடாது என பாதுகாப்பு அமைச்சின் செயலாளரர் எச்.எஸ்.சம்பத் துய்யகொந்த தெரிவித்துள்ளார். கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற ஜெனரல் சர்.ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்ச்சியில் பாதுகாப்பு படைத் தலைவர்கள், முப்படைத் தளபதிகள், பொலிஸ் மா அதிபர், பிற பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள், இராஜதந்திர அதிகாரிகள், கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் அதிகாரிகள், சிரேஷ்ட முப்படை மற்றும் பொலிஸ் அதிகாரிகள், கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் கல்வி, இராணுவ மற்றும் நிர்வாக ஊழியர்கள் மற்றும் பட்டதாரிகளின் குடும்ப உறுப்பினர்கள் உட்பட ஏராளமானோர் பங்கேற்றனர்.

இதன்போது உரையாற்றிய பாதுகாப்பு செயலாளர்-

தேசிய பாதுகாப்பைப் பொருத்தவரையில், நாட்டு மக்களின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வு என்பது பாதுகாப்பு பொறிமுறையில் முதன்மையானதாகும். பல நூற்றாண்டுகளாக, போரின் விளைவுகளையும் அதன் கொடூரமான நினைவுகளையும் நாம் பார்த்திருக்கின்றொம். அதே நேரத்தில் அமைதியான சூழலின் குணாம்சங்களையும் அதன் பலத்தையும் நாம் அனுபவித்திருக்கிறோம். பயணத்தின் அடுத்த கட்டத்திற்கு செல்லும் போது, ஒரு தேசமாக, கடந்த காலத்திலிருந்து கற்றுக் கொள்ளும் பாடங்களை எதிர்காலத்தில் தீர்க்கமான முறையில் பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். அமைதி, ஸ்திரத்தன்மை மற்றும் ஒத்துழைப்பின் பெறுமதியை நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது-என்றார். (அ)

# பெருந்தெருக்கள் அபிவிருத்தி, ரயில் தண்டவாள வேலைகளை துரிதப்படுத்த ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு, ஒக். 18

பொது மக்களுக்கு ஏற்படக் கூடிய பாதகமான விளைவுகளை மட்டுப்படுத்தி பெருந்தெருக்கள் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற போக்குவரத்து பெருந்தெருக்கள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடலில் ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

இதன்போது வீதி அபிவிருத்தி வேலைத்திட்டங்களை ஒழுங்குபடுத்தல் மற்றும் செயற்திறனுடன் முன்னெடுத்தல் என்பன கிராமிய பொருளாதார இலக்குகளை அடைந்துகொள்ள வழிவகுக்கும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கிராமிய அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுக்கும்போது பெறுகைச் செயற்பாடுகள் ஒழுங்குமுறைக்கமைய முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும், ஒரு சிலருக்கு மாத்திரம் ஒப்பந்தங்கள் கிடைப்பதற்கு மாறாக பிரதேச மற்றும் கிராமிய மக்களுக்கு பலன்கள் கிடைக்கும் வகையில் குறித்த வேலைத்திட்டங்களை தயாரிக்குமாறும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

போக்குவரத்து பெருந்தெருக்கள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சினால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் குறித்து இதன்போது விரிவாக மீளாய்வு செய்யப்பட்டதோடு, மத்திய அதிவேக வீதியின் மீரிகம - கடவத்தை பகுதியை நிர்மாணிப்பது குறித்தும் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

துறைமுகங்கள், விமான நிலையங்கள், பெருந்தெருக்களை அபிவிருத்தி செய்வது இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு முக்கியமானதாகும் என்றும், அதற்கான வேலைத்திட்டங்களை ஒழுங்குமுறைக்கமைய திட்டமிடுவதால் தேசிய பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டிருக்கும் பெருந்தெருக்கள் அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் போது சுற்றாடல் பாதிப்புகள், நிதி பாதிப்புகள், பொது மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் என்பவற்றை கருத்தில் கொண்டு பொது மக்களுக்கு ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகளை மட்டுப்படுத்தி வேலைத்திட்டங்களை துரிதப்படுத்த நடவடிக்கை எடுப்பது தொடர்பிலும் இங்கு அவதானம் செலுத்தப்பட்டது.

புகையிரத ஊழியர்கள் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் வகையில் புகையிர தண்டவாள வேலைத்திட்டங்களை துரிதப்படுத்துமாறும் ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

கலந்துரையாடலில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி சனத் நந்திக குமாநாயக்க, போக்குவரத்து பெருந்தெருக்கள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் கே.டீ.எஸ். ருவன் சந்திர உட்பட அமைச்சின் அதிகாரிகள் பலர் கலந்துகொண்டனர். (அ)

# உலகளாவிய தேவைகள் கருதிய எதிர்கால கல்வித் திட்டம் தேவை

## ஜனாதிபதி அநுரகுமார சுட்டிக்காட்டு


கொழும்பு, ஒக். 18

உலகளாவிய தேவைகளைக் கருத்தில் கொண்டு இலங்கையின் கல்வி தொடர்பான எதிர்காலத் திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநயக்க தெரிவித்தார்.

உலகளாவிய தேவைகளை கருத்திற்கொண்டு இலங்கையின் கல்வி தொடர்பான எதிர்காலத் திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டுமெனவும் நாட்டின் முன்னேற்றத்திற்கு உதவும் வகையில் மனித வளத்தை மேம்படுத்துவதற்காக மாணவர்களை அறிவாற்றல் நிறைந்தவர்களாக மாற்ற வேண்டும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கல்வி, விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சுக்களின் முன்னேற்ற மீளாய்வு கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அடுத்த பத்து ஆண்டுகளில் உலகுக்கு தேவையான மனித வளத்தை உருவாக்கும் பொறுப்பு



கல்வி அதிகாரிகளை சார்ந்துள்ளது. அதற்கான பரந்த நோக்குடன் கல்வித் திட்டங்களைத் தயாரிக்க வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய ஆகியோரின் தலைமையில் நடைபெற்ற அமைச்சுக்களின் முன்னேற்ற மீளாய்வின் போது கல்வி, விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப அமைச்சுக்களினால் செயல்படுத்தப்படும் ஐந்து திட்டங்கள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

பாடசாலைக் கல்வி நவீனமயமாக்கல், ஆசிரியர் கல்வி, இடைநிலைக் கல்வி, தொழில்நுட்பக் கல்வி, தகவல் தொழில்நுட்பக் கல்வியின் மேம்பாடு என்பன தொடர்பில் இக்கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது.

விஞ்ஞானம், கணிதம், தொழில்நுட்பம் ஆகிய உயர்தர பாடங்களை கற்பிக்கும் பாடசாலைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது குறித்தும் ஆராயப்பட்டது.

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, கல்வி அமைச்சின் செயலாளர் திலகா ஜயசுந்தர மற்றும் அமைச்சின் அதிகாரிகள் உள்ளிட்டோர் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு-கிழக்கில் முன்னணி 10 ஆசனங்கள் கைப்பற்றும்

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நம்பிக்கை

முல்லைத்தீவு, ஒக். 18

**வடக்கு-கிழக்கில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி குறைந்தது 10 ஆசனங்களை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதே தமது இலக்கு என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.**



பாராளுமன்றத் தேர்தலுக்கான தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் வன்னி மாவட்ட வேட்பாளர் அறிமுக கூட்டம் நேற்று முன் தினம் மாலை முல்லைத்தீவில் இடம்பெற்றது. இதன்போது கருத்து தெரிவித்த தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழருடைய ஆதரவோடு ஒற்றையாட்சி அரசியலமைப் பொன்று நிறைவேற்றப்பட்டதாக வரப்போகும் வரலாற்றுத் தவறைத் தடுக்க, வடகிழக்கில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி குறைந்தது 10 ஆசனங்களை கைப்பற்றவேண்டும் எனவும், அதுவே தமது இலக்கு எனவும் அவர் கூறினார். (அ)

# நாகரிகமான விமர்சனங்களே தேர்தல் மேடைகளில் அவசியம்

## கோருகிறார் ஆ.யதீந்திரா



திருமலை, ஒக். 18

எதிர்காலத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒன்றிணைவைக் கருத்திற்கொண்டு, விமர்சன அரசியலை, தமிழ்த் தேசியக் கட்சிகள் நாகரிகமாகக் கையாளவேண்டும் என தமிழரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட வேட்பாளர் ஆ.யதீந்திரா வலியுறுத்தியுள்ளார்.

தமிழ்த் தேசியப் பரப்பில், எதிர்காலத்தில், தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கிடையே ஏற்படப் போகும், ஒன்றிணைவைக் கருத்திற்கொண்டு, தேர்தல் பிரசாரங்களில் நாகரிகமான விமர்சனங்களை முன்வைக்குமாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். மூதூரில் கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் இவ் வேண்டுகோளை விடுத்தார்.

எல்லோரும் நாகரிகமாக விமர்சனங்களை முன்வையுங்கள். எதிர்காலத்தில், ஒன்றாக பணியாற்ற வேண்டும். கூட்டிணைவுகளை கருத்திற்கொண்டு அனைவரும் செயற்படுங்கள் எனவும் அவர் வலியுறுத்தினார். (அ)

# சாவகச்சேரியில் தேசிய மக்கள் சக்தியின் தென்மராட்சிக்கான அலுவலகம் திறப்பு

யாழ்ப்பாணம், ஒக். 18

தேசிய மக்கள் சக்தியின் தென்மராட்சிக்கான அலுவலகம் ஏ-9 வீதி, சாவகச்சேரி பகுதியில் நேற்று முன் தினம் திறந்து வைக்கப்பட்டது.

அலுவலக திறப்பு விழா நிகழ்வில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தேசிய மக்கள் சக்தியின் யாழ்.மாவட்ட அமைப்பாளருமாகிய இராமலிங்கம் சந்திரசேகரம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

பிரதம விருந்தினருடன் யாழ்.தேர்தல் மாவட்ட வேட்பாளர்களும் மேள வாத்தியத்துடன் அழைத்துவரப்பட்டு மாலை அணிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து பிரதம விருந்தினர் அலுவலகத்தை நாடா வெட்டி திறந்து வைத்தார்.

நிகழ்வில் யாழ்.தேர்தல் மாவட்ட வேட்பாளர்களான கருணாநாதன் இளங்குமரன் மற்றும் மருத்துவர் எஸ்.சிறீ. பவனந்தராஜா, ஜெயச்சந்திர மூர்த்தி ரஜீவன், தேசிய மக்கள் சக்தியின் தென்மராட்சி மகளிர் அணி அமைப்பாளர் வெண்ணிலா இராசலிங்கம், ஆசிரியர் காராளசிங்கம் பிரகாஸ், மென்பொருள் பொறியாளர் உதயகுமார் கீர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர். (அ)

# கிளிநொச்சியில் ஈ.பி.டி.பி தேர்தல் அலுவலகம் திறப்பு

கிளிநொச்சி, ஒக். 18

ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் தேர்தல் அலுவலகம் கிளிநொச்சி தர்மபுரத்தில் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அலுவலகத்தை திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் கட்சியினர், கட்சியின் ஆதரவாளர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (அ)

# அம்பாறை மாவட்ட தமிழர்களின் இருப்பு பாதுகாக்கப்படவேண்டும்!

## வேட்பாளர் சோ.புஸ்பராஜா

அம்பாறை, ஒக். 18

“அம்பாறை மாவட்ட தமிழர்களின் இருப்பு, அடையாளம் பாதுகாக்கப்பட வேண்டும். அதற்காக இந்த தேர்தல் களத்தில் குதித்துள்ளேன். அனைவரும் சிந்தித்து செயற்படுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.”

இவ்வாறு அம்பாறை மாவட்ட ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளரும் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான சோ.புஸ்பராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஏனைய மாவட்டங்களை விடவும் அம்பாறை மாவட்ட அரசியல் சூழ்நிலை வித்தியாசமானது. இங்கு தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லிம்கள் வாழ்கின்றார்கள். இங்குள்ள தமிழர்கள் சிறுபான்மையிலும் சிறுபான்மையாக உள்ளார்கள். திருகோணமலையும் இதே நிலைதான்.

அதிலும் அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் எதிர் நோக்கும் நெருக்கடிகளும், சில இனவாத இஸ்லாமிய அரசியல்வாதிகளால் எதிர்நோக்கும் இன்னல்களும், அடக்குமுறைகளும், ஆக்கிரமிப்புக்களும், அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுவதும் யாவரும் அறிந்த விடயமே.

தமிழ் மக்கள் ஏனைய இனங்களுடன் சமமாக சகோதரத்துடன் வாழவே விரும்புகின்றனர். ஆனால், சில இனவாத இஸ்லாமிய அரசியல்வாதிகளும் அடிப்படைவாதிகளும் அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மக்களின் கலை கலாசார விழுமியங்களை அழிக்கும் செயற்பாடுகளையும் தமிழரின் வளங்களை சுரண்டும் செயற்பாடுகளையும் கைவிட்டதாக இல்லை. இதற்கு சான்றாக பல தமிழ்க் கிராமங்களில் இருந்து தமிழ் மக்கள் விரட்டப்பட்ட வரலாறுகளும் படுகொலைகளும் உள்ளன. தற்போதும் மத மாற்றங்கள் நில ஆக்கிரமிப்புக்கள் தொடர்ந்து கொண்டு உள்ளமை கவலையானதே. இதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

வருங்கால சந்ததியினருக்கு எமது இருப்பை அடையாளத்தை பாதுகாத்து கொடுக்க வேண்டியதும் நாம் எல்லோரினதும் கடமையாகும். இதுவே இன்றைய இளைஞர்களினதும் அவாவாகவும் உள்ளது.

ஏனைய சமூகங்களுடன் சமத்துவமாக வாழ்ந்த தமிழ் சமூகம் ஏனைய சமூகங்களால் பாதிக்கப்பட்டு இன்று அரசியல் அநாதைகளாக இருப்பதற்கு யார் பொறுப்பு?

இந்த நிலை இனியும் தொடரக் கூடாது. இதற்கு முற்றுப்புள்ளி வைக்கவே நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் உங்களில் ஒருவனாக நான் களத்தில் இறங்கியுள்ளேன்-என்றார். (அ)

# ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி அம்பாறை வேட்பாளர் அறிமுக நிகழ்வு

அம்பாறை, ஒக். 18

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் வேட்பாளர் அறிமுக நிகழ்வு அம்பாறையில் நடைபெற்றது.

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் அம்பாறை தேர்தல் மாவட்டத்தில், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியில் போட்டியிடும் வேட்பாளர்களின் அறிமுக நிழகழ்வு நேற்று முன் தினம் நடைபெற்றது.

ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ், புளட், ஈரோஸ் ஜனநாயக முன்னணி, ஜனநாயகப் போராளிகள் அமைப்பு ஆகியன கூட்டாக அம்பாறை தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுகின்றன.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின், அம்பாறைக்கான இணைப்பாளர் ஹென்றி மஹேந்திரன் தலைமையில் நடைபெற்ற வேட்பாளர் அறிமுக நிகழ்வில் கட்சியின் ஆதரவாளர்கள் பலரும் பங்கேற்றனர்.

# மதுபானச்சாலை விவகாரத்தில் தொடர்ந்தும் ஆதாரமற்ற தகவல்

## சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்கிறார் அங்கஜன்

யாழ்ப்பாணம், ஒக். 18

கடந்த ஆட்சிக் காலத்தில் நாம் புதிய மதுபான சாலைக்கான அனுமதியை அரசிடமிருந்து பெற்றுக் கொண்டதாக பல்வேறு தரப்புகளாலும் முன் வைக்கப்படுகிற ஆதாரப்பூர்வமற்ற தகவல்களுக்கு சட்ட நடவடிக்கை எடுக்க தயாராகி வருகிறோம் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தெரிவிக்கையில்-

தற்போது நாட்டில் ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்பட்டு அதன் அடுத்த படியாக பாராளுமன்றத் தேர்தலை நோக்கி நாடு நகர்ந்து செல்கிறது. இந்நிலையில் என் மீதும் எனது தந்தையார் மீதும் பழி சுமத்தும் நோக்கில் சிலர் எந்த விதமான ஆதாரமும் அற்ற வீண் குற்றச்சாட்டுகளை தமது சுயலாப அரசியல் தேவைகளுக்காக முன் வைத்து வருகின்றனர்.

இந்த ஆதாரப்பூர்வமற்ற குற்றச்சாட்டுகளை முன் வைப்பது யார் என பார்த்தால் கடந்த காலத்தில் எம்மோடு நேரடியாக போட்டி போட்டு வெல்ல முடியாதவர்களே. இவ்வாறான பொய் குற்றச்சாட்டுகளை பரப்பி வருகின்றனர். ஒரு சில அரசியல்வாதிகளும், எமது சமூக சேவைக்கு ஈடு கொடுக்க முடியாதவர்களுமே இவ்வாறு பொய்யாக வாய்க்கு வந்தபடி பேசி வருகின்றனர்.

இவ்வாறானவர்களின் அர்த்தமற்ற பேச்சுக்களுக்கு பதில் கூற வேண்டிய தேவை எமக்கில்லை.



ஆனாலும் நம் மக்களை தெளிவுபடுத்த வேண்டிய தேவை நமக்கு உண்டு. அதனால்தான் சத்திய கடதாசி ஊடாக நாம் எமது ஆதாரங்களை முன் வைத்து, புதிதாக எந்த ஒரு மது... கொள்ளவில்லை என்பதை மக்களுக்கு நிரூபித்துள்ளோம்.

எம்மிடம் இவ்வாறான அனைத்து ஆதாரங்களும் உள்ள போதிலும் சிலர் தமது சுயலாபத்திற்காக வாய்க்கு வந்தபடி உளறி வருகின்றனர். இவ்வாறானவர்களின் சுயலாப அரசியல் நோக்கத்திற்கான இத்தகைய பொய் குற்றச்சாட்டுகள் எதிர்காலத்திலும் திட்டமிட்டு பரப்பப்படுமானால், பரப்பும் நபர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அத்தோடு இவ்வாறு பொய் குற்றச்சாட்டை முன்வைக்கும் நபர்கள் அதனை ஆதாரத்தோடு முன் வைத்தால் அரசியலில் இருந்து அந்தத் தருணமே விலகுவேன் என்பதை உறுதியாக கூறிக்கொள்கிறேன்-என்றார். (அ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலமான எதிர்க்கட்சி நாட்டில் மிகஅவசியம்

## மக்கள் போராட்ட முன்னணி வேட்பாளர் நுவான் போபகே

கொழும்பு, ஒக். 18

**அரசாங்கம் சரியான பாதையில் பயணிக்க வேண்டுமாயின் பலமாக எதிர்கட்சியொன்று அவசியம் என மக்கள் போராட்ட முன்னணியின் வேட்பாளர் சட்டத்தரணி நுவான் போபகே தெரிவித்துள்ளார்.**

பிலியந்தலையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

மக்கள் போராட்ட முன்னணியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களுடனான சந்திப்பு பிலியந்தலை நகரில் இடம்பெற்றது. இதன்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த அரசாங்கத்தில் ஒரு மாற்றம் காணப்பட்டது. பாரிய அணியாக திரண்டு வெற்றியை இந்த அரசாங்கத்திற்கு பெற்றுக் கொடுத்திருந்தோம். மக்கள் மைத்திரிபால சிறிசேன மீது நம்பிக்கை வைத்து வாக்களித்தனர். அவர் மக்களை ஏமாற்றினார். கோட்டாவின் மீது நம்பிக்கை வைத்து வாக்களித்தும் அவரும் மக்களை ஏமாற்றினார். தற்போது அநுர அனைத்து பிரச்னைகளுக்கும் தீர்வை வழங்குவார் என நம்பி இருக்கும் சமூகத்தை நாம் உருவாக்க தயாராகவில்லை. மக்களின் வாக்குகளை பெற்று அவர்களை ஏமாற்றும் எதிரணியினர் அனைத்து இன மக்களுக்கும் பொறுப்புக் கூற வேண்டும்.

அதேபோன்று காஸ் சிலிண்டரில் தற்போது ராஜபக்ஷர்களுடன் இருந்த திருட்டுக்கும் பலே தேர்தலில் போட்டியிடுகின்றது. எதிரணியில் மாற்றம் ஏற்படவேண்டும். ஊழல் மோசடியாளர்கள் உள்ள எதிரணி இருக்குமாயின் எந்த தருணத்திலும் மக்களின் எதிர்பார்ப்புக்கள் நிறைவேற்றப்படாது. தற்போதைய அரசாங்கத்தின் முன்னிலையில் வேறுபட்ட எதிரணியை உருவாக்க வேண்டும்-என்றார். (அ)

# இனப்பிரச்னைக்கு தீர்வு காணும் விடயத்தில் ஜனாதிபதியின் கொள்கை மாறுபட்டுள்ளது!

## இராதாகிருஷ்ணன் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 18

இனப்பிரச்னைக்குத் தீர்வு காண்பதில் ஜனாதிபதியின் கொள்கை மாறுபட்ட வகையில் அமைந்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் குற்றம் சாட்டியுள்ளார்.

ஹற்றனில் இடம்பெற்ற கூட்டத்தில் கருத்துரைத்த அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி அவர்கள் இனப்பிரச்னையைத் தீர்ப்பார் என்ற எதிர்பார்ப்புடன் மக்கள் இருக்கின்றார்கள்.

வடகிழக்கு மக்களுக்கும் சரி, மலையக மக்களுக்கும் சரி இந்த சூழ்நிலையில் அவரது உரையானது, சற்று சந்தேகத்தை எழுப்புகின்ற ஒரு சூழ்நிலையாக இருக்கின்றது.

ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கைக்கு ஆதரவாக ஏற்படுத்தப்பட்ட பிரேரணையை அவர் எதிர்ப்பதாகக் கூறியுள்ளார்.

அந்த வகையில் இலங்கையின் இனப்பிரச்னை தீர்வதற்கு அவர் ஒரு சாதகமான பதிலைச் சொல்லவில்லை.

அதே போன்று யுத்தக் குற்றம் செய்தவர்களை நாங்கள் கைது செய்ய மாட்டோம் என்றும் கூறியுள்ளார்.

உள்நாட்டு நீதிபதிகளை வைத்தே பரிசீலனை செய்யப்படும் என்றும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

இது ஒட்டு மொத்தமாக ஒரு இனப்பிரச்சினையை அல்லது தமிழர்களுக்கெதிரான ஒரு சூழ்நிலையை உருவாக்குவதற்கான ஒரு சூழ்நிலையே.

அதே போன்று சிங்கள மக்கள் இந்த பிரச்சினைகள் தீர்ந்து ஒரு சுமுகமான நாடாக, சுமுகமாக வேலை செய்ய வேண்டும் என்றே எதிர்பார்க்கின்றனர்.

ஜனாதிபதியின் கொள்கை ஏட்டிக்குப் போட்டியாக இருக்கின்றதென்பது தெட்டத் தெளிவாக உள்ளது-என்றார். (அ)

# நாணய நிதியத்தின் வரிச்சூத்திரத்தை அநுர அரசு மாற்றியமைக்க வேண்டும்

## சஜித் பிரேமதாஸ கோரிக்கை

கொழும்பு, ஒக். 18

சர்வதேச நாணய நிதியத்தின் கட்டமைப்பிற்குள் மக்களின் சுமையை குறைக்கும் புதிய உடன்படிக்கைக்கு தற்போதைய அரசாங்கம் செல்லவேண்டும். இவ்வாறான உடன்படிக்கையின் மூலம் மக்களின் தோள்களில் சுமத்தப்பட்டுள்ள வரிச்சுமைகள் தளர்த்தப்பட்டு அதன் மூலம் வலுவான பொருளாதார ஸ்திரத்தன்மை உருவாக்கப்பட வேண்டும். ஆனபடியால் தற்போதைய அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுக்களை ஆரம்பித்து, வரிச்சுமையை குறைக்கும் புதிய ஒப்பந்தத்திற்கு செல்லும் என எதிர்பார்க்கிறோம். இவ்வாறான வேலைத்திட்டங்களுக்கு தாம் ஆதரவளிக்கத் தயார் என ஐக்கிய மக்கள் சக்தி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மேற்கு தேர்தல் தொகுதி அமைப்பாளர் திருமதி அப்சாரி திலகரத்ன ஏற்பாட்டில் கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் வாழும் 220 இலட்சம் மக்கள் பல்வேறு கடுமையான சவால்களை எதிர்கொண்டுள்ளனர். இந்த சவால்களை முறியடிக்க நான் வழி வகுப்பேன்.

வங்குரோத்து தன்மையால் பொருளாதாரத்தை சுருங்கச் செய்யும் அரச கொள்கையினால் மக்கள் நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கும் நேரத்தில், வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து, பணவீக்கம் அதிகரித்து மக்களின் வாழ்க்கை சீரழிந்து போயுள்ளது.



பொருளாதார பொறிமுறை பலவீனமடைந்து, பொருளாதார வளர்ச்சி சுருங்கி இருக்கும் எமது நாடு, 2028 முதல் மீண்டும் கடனை செலுத்த வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் கட்டமைப்பிற்குள் செயல்படுவது இங்கு மிகவும் முக்கியமானது. பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு இது முக்கியமானது.

அத்துடன் முன்னாள் அரசாங்கம் தேசியக் கடன் மறுசீரமைப்பின் போது மக்கள் மீது அதிக சுமையை ஏற்றி, மக்களுக்கு அழுத்தங்களையும் அசௌகரியங்களையும் ஏற்படுத்தும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது. இவ்வாறு மக்களுக்கு ஏற்படுத்திய அசௌகரியங்களுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியே முன்நின்றது. சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து மக்களுக்கு நிவாரணம் கிடைக்காத காரணத்தினால், முன்னாள் அரசாங்கம் ஏற்படுத்திய உடன்படிக்கையில் திருத்தங்களை ஏற்படுத்த ஐக்கிய மக்கள் சக்தி கலந்துரையாடியுள்ளது. மக்கள் சார் உடன்படிக்கையை எட்டுவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயாராக இருந்தது. ஜனாதிபதி தேர்தல் பரப்புரைகளிலும் நாம் இதனை தெளிவாக குறிப்பிட்டிருந்தோம்.

இந்த வரிச் சூத்திரம் உடனடியாகத் திருத்தப்பட்டு, மக்கள் நலன் சார்ந்த நிவாரண வரிச் சூத்திரமொன்றை எட்ட வேண்டும்-என்றார். (அ)

# கோடிகளை வாங்கிய அரசியல்வாதிகளே இன்று கோடிகளைப் பற்றி பேசுகின்றனர்!

## அனுஷா சந்திரசேகரன் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 18

கோடிகளை வாங்கிய அரசியல்வாதிகளே, இன்று கோடிகளைப் பற்றி பேசிக்கொண்டிருக்கின்றனர் என ஐக்கிய ஜனநாயகக் குரல் கட்சியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளர் சட்டத்தரணி அனுஷா சந்திரசேகரன் தெரிவித்தார்.

தலவாக்கலையிலுள்ள தேர்தல் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையில் கொள்கை அரசியலை முன்னெடுத்த பெருந்தலைவர் அமரர் சந்திரசேகரனின் மகள்தான் நான். மாறாக கோடிகளுக்கு விலைபோகும் நபர் கிடையாது.

2020 பொதுத்தேர்தலில் நான் சுயேச்சையாக களமிறங்கி இருந்தேன். அப்போதுகூட முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்‌ஷவிடம் 20 கோடி ரூபா பணம் வாங்கிவிட்டே தேர்தலில் போட்டியிட்டதாக எதிரணி தரப்பில் பிரசாரம் முன்னெடுக்கப்பட்டது.

அதுமட்டுமல்ல வாக்குகளை சிதறடிப்பதற்காகவே நான் களமிறக்கப்பட்டுள்ளேன் என்றெல்லாம்கூட தகவல்கள் பரப்பட்டன. ஆனால் இவை எதுவும் உண்மை அல்ல. எனது தந்தையின் நண்பர்களின் உதவியுடன்தான் பொதுத்தேர்தலை எதிர்கொண்டேன்.

தேர்தலில் மக்கள் எனக்கு ஆதரவு வழங்கி இருந்தனர். எனினும், பாராளுமன்றத்துக்கு தெரிவாகக்கூடிய வாக்குகளை நோக்கி நகரமுடியவில்லை. இவ்வாறு பாராளுமன்ற பிரதிநிதித்துவம் கிடைக்கப்பெறாததால் அரசியல் ரீதியில் பழிவாங்கல்களுக்கு உள்ளாக்கப்பட்டேன்.

எனக்காக வேலை செய்த தொண்டர்களைக்கூட பழிவாங்கினார்கள். இதற்கு எதிராக குரல் எழுப்பினேன். அவ்வாறு குரல் எழுப்பும்வேளைகளில் பழிவாங்கல்கள் அதிகரித்தன. அதன்பின்னர் அமைதி காத்தேன். அடக்குமுறைகள் குறைந்தன. எனவே, அரசியலில் அமைதியும் தேவையெனக் கருதி அமைதி காத்தேன்.

பாராளுமன்ற பிரதிநிதித்துவம் கிடைக்காத நான் ஐந்து வருடங்கள் எங்கே சென்றேன் எனக் கேட்கின்றனர். ஆனால் பாராளுமன்றம் சென்ற எமது மலையக பிரதிநிதிகள் என்ன செய்தனர்? தொலைக்காட்சி விவாதங்களில்கூட அடித்துக் கொள்ளும் நிலைமை அல்லவா காணப்பட்டது?

பொதுத்தேர்தலில் ஆளுங்கட்சியான தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து களமிறங்க வேண்டும் என்பதே எனது எண்ணமாக இருந்தது. எனினும், அதற்கான வாய்ப்பு வழங்கப்படவில்லை. அதன்பின்னர் சுயேச்சையாக போட்டியிட திட்டமிட்டிருந்தேன்.

அவ்வேளையிலேயே தலைவர் ரஞ்சன் ராமநாயக்க என்னை அழைத்து கதைத்தார். ஊழல் அற்ற அரசியலை செய்வதற்காக புதிய கட்சியொன்றை ஆரம்பித்துள்ளதாகக் கூறினார். அதில் போட்டியிடுமாறு கேட்டுக் கொண்டார். ஐக்கிய ஜனநாயகக் குரல் என்ற அந்த கட்சியின் கொள்கை பிடித்திருந்தது. அதனால்தான் அக்கட்சி ஊடாக களமிறங்கியுள்ளேன்-என்றார். (அ)

# வழிபாட்டுடன் இ.தொ.க தேர்தல் பிரசாரப் பணி ஆரம்பம்

கொழும்பு, ஒக். 18

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிடும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரசார பணிகள் நேற்று முன் தினம் ஆலய வழிபாட்டுகளுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.


இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரனின் தலைமையில் கொட்டகலை ஸ்ரீ முத்து விநாயகர் ஆலயத்தில் பூசை வழிபாடுகள் இடம்பெற்றதை தொடர்ந்து, மக்கள் சந்திப்பு கூட்டம் இடம் பெற்றது.

இதில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதி தேசிய அமைப்பாளரும் கொட்டகலை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளருமான ராஜமணி பிரசாத், முன்னாள் உப தவிசாளர், உறுப்பினர்கள், அரசியல் அமைப்பாளர்கள், ஆலய பரிபாலன சபையினர், வர்த்தகர்கள், பொது மக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் வேட்பாளர்களாக அதன் பொது செயலாளர் ஜீவன் தொண்டமான், தவிசாளர் மருதபாண்டி ராமேஷ்வரன், தேசிய அமைப்பாளர் பழனி சக்திவேல் ஆகியோர் நுவரெலியா மாவட்டத்தில் களமிறங்கியுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் 4ஆவது சர்வதேச ஆய்வு மாநாடு





வந்தாறுமூலை, ஒக். 18

**தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான 4ஆவது சர்வதேச ஆய்வு மாநாடு நடைபெற்றது.**

பல்கலைக்கழக பதில் துணை வேந்தரும் மாநாட்டின் தலைவருமான கலாநிதி யூ. எல். அப்துல் மஜீத் தலைமையில் தொழில்நுட்பவியல் பீட பிரதான கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இந்த மாநாடு நடைபெற்றது.

இந்த ஆய்வு மாநாட்டை தென்கிழக்கு பல்கலைக்கழக தொழில்நுட்பவியல் பீடம் ஏற்பாடு செய்திருந்தது.

"நிலையான எதிர்காலத்துக்கான நவீன தொழில்நுட்பங்கள் மூலம் புதுமையான எல்லைகளை ஆராய்தல்" எனும் தொனிப்பொருளில் குறித்த மாநாடு நடைபெற்றது.

மாநாட்டுக்கு விசேட பேச்சாளர்களாக பிரித்தானியாவைச் சேர்ந்த பேராசிரியர் டிலாந்தி அமரதுங்க மற்றும் தாய்லாந்தை சேர்ந்த உதவி பேராசிரியர் சாக்லாம் சில்பசுவாஞ்சை ஆகியோர் நிகழ்நிலையூடாக கலந்து கொண்டு உரையாற்றினர்.

இந்த ஆய்வு மாநாட்டுக்கு 81 ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும் 52 கட்டுரைகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு விவாதிக்கப்பட்டன. நேபாளம், பங்களாதேஷ் மற்றும் ஐக்கிய அமெரிக்காவில் இருந்தும் பல்வேறு ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டன.

கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி எம். எம். பாஸில், முகாமைத்துவ வர்த்தக பீடத்தின் பீடாதிபதி ஏ. எம். எம். முஸ்தபா, இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழிபீட பீடாதிபதி அஷ்ஷெய்க் எம். எச். ஏ. முனாஸ், நூலகர் எம். எம். றிபாவுடீன், பேராசிரியர் எம். எச். தௌபீக், லைக்கா ஞானம் பௌண்டேசன் அம்பாறை இணைப்பாளர் அகிலன், ஆய்வு கட்டுரைகளை சமர்ப்பித்தோர் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)



# ஆசிரியர் தின விழாவும் சேவைநலன் பாராட்டும்

சம்மாந்துறை, ஒக். 18

சர்வதேச ஆசிரியர் தினத்தை முன்னிட்டு சம்மாந்துறை வலயத்துக்குட்பட்ட வேப்பையடி கலைமகள் மகா வித்தியாலயத்தில் ஆசிரியர் தின விழாவும் சேவை நலன் பாராட்டு விழாவும் அதிபர் கே. தியாகராஜா தலைமையில் புதன்கிழமை நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராக சம்மாந்துறை வலய ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் வி. ரி. சகாதேவராஜா கலந்து சிறப்பித்தார்.

சிறப்பு விருந்தினராக பாடசாலை இணைப்பாளரும், விவசாய வளவாளருமான பி. மோகன் கலந்து சிறப்பித்தார்.

பாடசாலை பழைய மாணவர் மன்றம் மற்றும் உயர்தர மாணவர்கள் இணைந்து நடத்திய இவ் விழாவில் முன்னதாக ஆசிரியர்களை மகிழ்விக்கும் வகையில் சில விளையாட்டு நிகழ்வுகள் நடை பெற்றன.

தொடர்ந்து ஆசிரியர் தின நிகழ்வு உயர்தர மாணவர்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது.

அதில் சகல ஆசிரியர்களுக்கும் நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. (எ)

## 9 வயது சிறுமி உலக சாதனை



மட்டக்களப்பு, ஒக். 18

மட்டக்களப்பு, காத்தான்குடியைச் சேர்ந்த முஹமட் பஸ்லி ஸீனத் என்ற 09 வயது சிறுமி சோழன் உலக சாதனை படைத்துள்ளார்.

சோழன் உலக சாதனை புத்தக நிறுவனம் காத்தான்குடி மீரா பாலிகா தேசிய பாடசாலையில் குறித்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந் தது.

குறித்த நிறுவனத்தின் மட்டக்களப்பு மாவட்ட தலைவர் கதிர வன் இன்பராஜ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், சிறுமி ஸீனத் 03 நிமிடம் 18 நொடிகளில் 140 பெருக்கல் கணக்குகளுக்கு விடை கொடுத்து உலக சாதனை படைத்தார்.


இவ்வாறு உலக சாதனை படைத்த சிறுமிக்கு சான்றிதழ், தங்கப் பதக்கம், நினைவுக் கேடயம், அடையாள அட்டை போன்றவை சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனத்தால் வழங்கப்பட்டன. (எ)

# சுற்றுச்சூழலை பாதுகாக்க திருமலையில் விழிப்புணர்வு

திருகோணமலை, ஒக். 18

"சுத்தமான மற்றும் பசுமையான திருகோணமலை" எனும் தொனிப்பொருளில் விழிப்புணர்வு நடைபவனி புதன்கிழமை நடைபெற்றது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்ட இந்த விழிப்புணர்வு நடைபவனி திருகோணமலை நகரிலுள்ள பேருந்து நிலையத்திலிருந்து திருகோணமலை நகர சபை வரை சென்று நகர சபை செயலாளரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.



சுத்தமான மற்றும் பசுமையான திருகோணமலை, வீதிகள் பொது இடங்களில் குப்பை போடாதீர்கள், மண்ணையும் நீரையும் மாசுபடுத்தும் பிளாஸ்ரிக்களை ஒழிப்போம், மரங்களை வளர்ப்போம், தூய்மையான காற்றை சுவாசிப்போம் போன்ற பல விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தியவாறும் இந்த நடைபவனி முன்னெடுக்கப்பட்டது.

இதில் பொதுமக்கள், ஹரித் தாஸ் நிறுவன பணிப்பாளர், உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)

# கார்மேல் பற்றிமாக் கல்லூரியின் 125ஆவது ஆண்டு நிறைவு விழா

கல்முனை, ஒக். 18

கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய பாடசாலையின் 125ஆவது ஆண்டு விழாவின் அங்குரார்ப்பணம் பாடசாலை அதிபர் எஸ். ஈ. றெஜினோல்ட் தலைமையில் கோலாகலமாக நடைபெற்றது. இதன்போது கண்கவர் கலை நிகழ்ச்சிகள் மேடையை அலங்கரித்தன.



கல்முனை கார்மேல் பற்றிமாக் கல்லூரியின் 125ஆவது ஆண்டு நிறைவு விழா ஒக்ரோபர் மாதம் 13ஆம் திகதி தொடக்கம் 2025 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 13 ஆம் திகதி வரை கொண்டாடப்படவுள்ளது.

இதனையொட்டியே குறித்த அங்குரார்ப்பண விழா நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக மட்டக்களப்பு மறை மாவட்டத்தின் ஓய்வு நிலை ஆயர் ஜோசப் பொன்னையா அடிகளார் கலந்து சிறப்பித்தார்.

# கல்முனை வலயம் 2ஆம் இடம் மாகாண செயலாளர் பாராட்டு




கல்முனை, ஒக். 18

அண்மையில் வெளியான க. பொ. த. சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் கிழக்கு மாகாணத்தில் கல் முனை வலயம் இரண்டாம் இடத்தைப் பெற்றது.

அதனைப் பாராட்டும் முக மாக கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் டபிள்யூ. பி. திஸநாயக்க பாராட்டு சான் றுப் பத்திரத்தை கல்முனை வல யக் கல்விப் பணிப்பாளர் எம். எஸ். சஹதுல் நஜீமிடம் வழங்கி னார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோல் பவுசர் வெடித்து சிதறி நைஜீரியாவில் 100 பேர் உயிரிழப்பு



அபுஜா, ஒக். 18

**நைஜீரியாவில் பெற்றோல் பவுசர் கவிழ்ந்து - வெடித்துச் சிதறியதில் 100 பேர் உடல் பருகிப் பலியாகினர். 50 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.**

நைஜீரியாவின் ஜிகாவா பகுதியில் பெற்றோல் ஏற்றிச்சென்ற பவுசர் வாகனம் நெடுஞ்சாலையில் திடீரென சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

நள்ளிரவில் ஏற்பட்ட இந்த விபத்தின்போது, பவுசரில் இருந்த பெற்றோல் கசிந்து வெளியேறியது. அப்போது ஆபத்தை உணராத மக்கள் பவுசரில் இருந்து கசிந்த பெற்றோலை சேகரித்தனர். திடீரென பவுசர் தீப்பிடித்து எரிந்தது. இந்த விபத்தில் சிக்கிய 100 பேர் இதுவரை உயிரிழந்ததாக பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 50இற்கும் மேற்பட்டோர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# லெபனான்மீது தாக்குதல் முதல்வர் உட்பட 27 பேர் பலி

பெய்ரூட், ஒக். 18

லெபனான் மீது வான்வழியே இஸ்ரேல் படைகள் நடத்திய தாக்குதலில் நேற்றுக்காலை 10 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணிநேரத்தில் 27 பேர் பலியாகினர். இவர்களில் தெற்கு பகுதியைச் சேர்ந்த நகர முதல்வர் ஒருவரும் அடங்குவார். பல்வேறு கட்டடங்கள் சேதமடைந்தன.

லெபனானின் தெற்கு பகுதி நகரான குவானாவில், ஹிஸ்புல்லா அமைப்பின் தளபதி ஜலால் முஸ்தபா ஹரிரி என்பவரை இலக்காக கொண்டு இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில், 15 பேர் உயிரிழந்தனர் என்று இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

தெற்கு லெபனான் மீது இஸ்ரேலின் 138 வான்வழி தாக்குதல்கள் இதுவரை பதிவாகியுள்ளன. இதேபோன்று, 6 நாள் போர் நிறுத்தத்துக்குப் பின்னர், பெய்ரூட் நகரின் தெற்கே அமைந்த புறநகர் பகுதிகளில் இஸ்ரேல் மீண்டும் தாக்குதல் நடத்தியது. இதில், முதல்வர் அகமது கஹில் கொல்லப்பட்டார் என்று அந்த மாகாண ஆளுநர் ஹூவைடா துர்க் உறுதிப்படுத்தினார்.

இதனால், கடந்த ஒக்ரோபர் 22ஆம் திகதி முதல் நேற்று வரை லெபனான் மீது இஸ்ரேல் படைகள் நடத்திய தாக்குதல்களில் அந்த நாட்டு மக்களில் 2, 377 பேர் உயிரிழந்தனர் என லெபனான் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இதுதவிர, 4 இலட்சம் குழந்தைகள் உட்பட 12 இலட்சம் பேர் புலம்பெயர்ந்துள்ளனர். (எ)

# நுளம்புகளால் பரவுகிறது அரியவகை வைரஸ் நோய்

## அமெரிக்காவில் ஒருவர் உயிரிழப்பு

வாஷிங்டன், ஒக். 18

அமெரிக்காவில் நுளம்புகளால் பரவும் அரிய வகை வைரஸ் நோய் பாதிப்பால் ஒருவர் உயிரிழந்தார்.

அமெரிக்காவின் கனெக்டிகட் மாகாணத்தைச் சேர்ந்த ரிச்சர்ட் பவல்ஸ்கி(வயது -49) என்பவர், கடந்த 2019ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் அவரது தோட்டத்தில் பராமரிப்பு வேலை செய்து கொண்டிருந்தபோது நுளம்பு கடித்துள்ளது. சாதாரண நுளம்புதான் என்பதால் இதை அவர் பெரிதாக கண்டுகொள்ளவில்லை.

ஆனால் அடுத்த சில தினங்களில் ரிச்சர்டின் உடல்நிலை மோசமடைய தொடங்கியுள்ளது. அவருக்கு கடுமையான ஒற்றைத் தலை வலியும், வாந்தியும் தொடர்ந்து ஏற்பட்டுள்ளது. மேலும் நரம்பியல் சார்ந்த பிரச்னைகளாலும் ரிச்சர்ட் பாதிக்கப்பட்டார். இதைத் தொடர்ந்து ரிச்சர்ட் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

அவரது உடலை பரிசோதித்த மருத்துவர்கள், அவருக்கு நுளம்புகளால் ஏற்படும் "ஈஸ்டர்ன் ஈகுவின் என்சிபலடிஸ்" என்ற அரிய வகை வைரஸ் நோய் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்பதை உறுதி செய்தனர். இந்த நோய் பாதிப்பு ஏற்பட்டவர்களில் 30 சதவீதம் பேர் உயிரிழந்து விடுகின்றனர் என்று மருத்துவர்கள் கூறினர். அதே சமயம், இந்த நோய் பாதிப்பு ஏற்பட்டு உயிர் பிழைத்தவர்கள் பெரும்பாலும் மூளை மற்றும் நரம்பியல் சார்ந்த பிரச்னைகளால் பாதிக்கப்படுகின்றனர்.

இந்த அரிய வகை வைரஸ் நோயுடன் சுமார் 5 ஆண்டுகளாக போராடி வந்த ரிச்சர்ட் பவல்ஸ்கி, கடந்த திங்கட்கிழமை உயிரிழந்தார்.

நுளம்புகளால் பரவும் இந்த வைரஸ் நோய் மிகவும் அரிதானது, ஆனால் அதே சமயம் மிக மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடியது என அமெரிக்க நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் எச்சரித்துள்ளது. (எ)

# பயங்கரவாதத்தை எதிர்ப்பதற்கு நேர்மையான பேச்சுகள் தேவை!

## பாகிஸ்தானில் இந்திய அமைச்சர் வலியுறுத்தல்

இஸ்லாமாபாத், ஒக். 18

"பயங்கரவாதம், பிரிவினைவாதம், தீவிரவாதத்தை எதிர்த்துப் போராடுவது எனும் ஷங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (எஸ். சி. ஓ.) முதன்மையான குறிக்கோள்களை அடைய நேர்மையான பேச்சுகள் முக்கியம்" என்று அதன் உச்சி மாநாட்டில் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் நடைபெற்ற எஸ். சி. ஓ. உச்சி மாநாட்டில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். "எஸ். சி. ஓவின் முதன்மையான குறிக்கோள்களான பயங்கரவாதம், பிரிவினைவாதம் மற்றும் தீவிரவாதத்தை எதிர்த்துப் போராடுவது, தற்போதைய காலத்தில் இன்னும் முக்கியமாகிறது. இதற்கு நேர்மையான பேச்சுகள், நம்பிக்கை, நல்ல அண்டை நாடு மற்றும் எஸ். சி. ஓ. சாசனத்தின் மீதான அர்ப்பணிப்பு ஆகியவை தேவை. இந்த 'மூன்று தீமைகளை' எதிர்கொள்வதில் எஸ். சி. ஓ. உறுதியாகவும் சமரசமின்றியும் இருக்க வேண்டும்.



உலகமயமாக்கல் மற்றும் மறுசீரமைத்தல் என்பது இன்றைய யதார்த்தம். எஸ். சி. ஓ. நாடுகள் இதை முன்னெடுத்துச் செல்ல வேண்டியது அவசியம். ஒத்துழைப்பு என்பது பரஸ்பர மரியாதை மற்றும் இறையாண்மை சமத்துவத்தின் அடிப்படையில் இருக்க வேண்டும். பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மையை அங்கீகரிக்க வேண்டும். ஒருதலைப்பட்சமாக செயல்படக் கூடாது. வர்த்தகம் மற்றும் போக்குவரத்தில் உலகளாவிய நடைமுறைகளை நாம் தெரிவுசெய்யாவிட்டால் முன்னேற முடியாது"- என்றும் அவர் கூறினார். (எ)

# இங்கிலாந்தில் வீடு வெடித்து 7 வயது சிறுவன் உயிரிழப்பு

பென்வெல், ஒக். 18

இங்கிலாந்தில் வீடு திடீரென வெடித்து சிதறியதில் 7 வயது சிறுவன் உயிரிழந்தான். குழந்தை உட்பட 6 பேர் படுகாயமடைந்தனர்.

இங்கிலாந்து நாட்டின் நியூகேசில் நகருக்குட்பட்ட பென்வெல் பகுதியில் வயலட் குளோஸ் என்ற இடத்தில் வீடு ஒன்று நேற்று காலை திடீரென வெடித்து சிதறியது. இதனால் ஏற்பட்ட வெடிசத்தம் அந்த பகுதியில் வசிப்பவர்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இதுபற்றி தகவல் அறிந்து வந்த பொலிஸார் தீவிர விசாரணை நடத்தினர். தீயணைப்பு மற்றும் மீட்புப் படையினரும் சம்பவ பகுதிக்கு சென்றனர்.



வீடு வெடித்ததும் ஏற்பட்ட தீயை அதிகாரிகள் போராடி அணைத்தனர். எனினும், இந்தச் சம்பவத்தில், அந்த வீடு முற்றும் சேதமடைந்தது. பேரிகைள் இருபுறமும் இடிந்து விழுந்தன.

இந்தச் சம்பவத்தில் 7 பேர் காயமடைந்தனர். இதில், 7 வயது சிறுவன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தான். (எ)

# கனடா பிரதமரின் செயல் ஏற்றுக்கொள்ள முடியாதது

## இந்தியா கடும் கண்டனம்

புதுடில்லி, ஒக். 18

பிரிவினைவாத தலைவர் ஹர்தீப் சிங் நிஜார் கொலையில் இந்தியாவுக்கு தொடர்பு உள்ளதாக கூறியதற்கான ஆதாரம் இல்லை என்று கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கூறிய நிலையில், இது மற்றவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாத ஏற்றுக்கொள்ள முடியாத நடத்தை என்று இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மத்திய வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில், "இன்று நாங்கள் கேள்விப்பட்டவை எல்லாம் நாங்கள் தொடர்ந்து பேசி வந்ததை உறுதிப்படுத்துவதாகவே இருக்கிறது. இந்தியா மற்றும் இந்தியத் தூதுவர்களுக்கு எதிராக தான் வைத்த கடுமையான குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் எந்த ஆதாரத்தையும் கனடா எங்களிடம் (இந்தியாவிடம்) வழங்கவில்லை. இந்தியா - கனடா இடையேயான உறவுகளின் இந்த ஏற்றுக் கொள்ள முடியாத சேதத்துக்கு கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ மட்டுமே பொறுப்பு" என்று தெரிவித்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலந்தாலோசனை செய்யும் பண்பு இன்றியமையாதது



கலாநிதி ஜெகான் பெரேரா

முக்கியமான தேசியப் பிரச்சினைகள் தொடர்பில் அரசாங்கத்தின் அணுகுமுறை எச்சரிக்கையுடனானதாகவும் முன்னைய அரசாங்கம் தீர்மானித்த திசையில் தொடருகின்றதாகவும் அமைந்திருக்கிறது. சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையையும் அதன் இறுக்கமான நிபந்தனைகளையும் பின்பற்றுவதில் இது தெளிவாகத் தெரிகிறது. ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக தேசிய மக்கள் சக்தியின் கடுமையாக கண்டனத்துக்குள்ளான முக்கியமான அதிகாரிகளே பொருளாதாரத்தைக் கையாளுவதற்கு பதவிகளில் தொடருவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

கடந்த வாரம் ஜெனீவாவில் தீர்மானத்துக்காக முடிவெடுப்பதற்காக முன்வைக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51-1 தீர்மானத்தின் வடிவில் வந்த மிகவும் உடனடியான சர்வதேச சவாலை எதிர்கொண்டதிலும் முன்னைய அரசாங்கங்கள் கடைப்பிடித்த எச்சரிக்கையுடனான அதே அணுகுமுறையையே அரசாங்கம் கடைப்பிடித்தது. ஜனாதிபதிகள் கோட்டாபய ராஜபக்ச, ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் தலைமையிலான அரசாங்கங்கள் கடைப்பிடித்த அதே கொள்கையையே இந்த அரசாங்கமும் கடைப்பிடித்த போதிலும் தீர்மானத்தை நிராகரிப்பதில் பெருமளவுக்கு இணக்கப்போக்கான மொழியைப் பயன்படுத்தியதை காணக்கூடியதாக இருந்தது.

முன்னைய அரசாங்கம் அறிமுகப்படுத்திய கொள்கைகளின் பயன்களை இந்த அரசாங்கம் அறுவடை செய்கிறது என்று அதை விமர்சிப்பவர்கள் சுட்டிக்காட்ட முனைகிறார்கள். அதே கொள்கைகளை நடைமுறைப்படுத்தியதன் விளைவாகவே முன்னைய அரசாங்கம் மக்கள் மத்தியில் செல்வாக்கை இழந்தது. ஆனால் எதிர்வரும் நவம்பர் 14 ஆம் திகதி நடைபெறவிருக்கும் பாராளுமன்ற தேர்தல் வரை எச்சரிக்கை தொடரும் சாத்தியம் இருக்கிறது. இது நாட்டின் பொருளாதாரத்துக்கும் சமூக உறுதிப்பாட்டுக்கும் பயனுடையதாக அமைந்திருக்கிறது. அது குறித்து குதர்க்கம் செய்வது முறையல்ல.

பொருளாதாரம் கத்திமுனையில் இருந்தது என்றும் அரசாங்க மாற்றம் ஒன்று பொருளாதாரத்தை ஒரு எதிர்மறையான நிலைக்குள் மூழ்கடித்து விடக்கூடும் என்றும் நாட்டின் வர்த்தகத் தலைவர்களினாலும் சர்வதேச நாணய நிதியம் மற்றும் சர்வதேச சமூகத்தினாலும் கணிசமான அக்கறை வெளிப்படுத்தப்பட்டது. தேர்தலுக்கு பிறகு வன்முறை எதுவும் மூளாதிருப்பதை உறுதிசெய்வதற்கு அரசாங்கம் மிகவும் நேர்மறையான நடவடிக்கைகளை எடுத்ததற்கு அதுவே காரணம்.

பாற்சோறு சமைத்து பரிமாறி பட்டாசுகளும் கொளுத்தி பாரம்பரியமாக வெற்றியைக் கொண்டாடுவதைப் போன்று தனது வெற்றையைக் கொண்டாட வேண்டாம் என்று ஜனாதிபதி அநுரா குமார திசாநாயக்க மக்களிடம் விடுத்த வேண்டுகோளும் அந்த நேர்மறையான நடவடிக்கைகளில் அடங்கும். கடந்த காலத்தில் தேர்தல் வெற்றிக் கொண்டாட்டங்கள் வன்முறைக்கும் அப்பாவிகளின் உயிரிழப்புகளுக்கும் வழிவகுத்ததுடன் நாட்டின் பெயருக்கு களங்கத்தையும் ஏற்படுத்தியது.


ஜனாதிபதி தேர்தலில் பெற்ற வெற்றியையும் அதை தொடர்ந்து சம்பாதித்த நற்பெயரையும் அடிப்படையாகக் கொண்டே எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில் பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றுவதற்கான தந்திரோபாயத்தை அரசாங்கம் வகுக்கிறது. அதிகாரத்தில் இருந்த முதல் இரு மாதங்களிலும் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளை கருத்திற்கொண்டு நேர்மறையான ஒரு நம்பிக்கை வாக்கெடுப்பை அரசாங்கம் பாராளுமன்றத் தேர்தலில் மக்களிடம் கோரும்.

ஜனாதிபதி தேர்தலில் அநுரா குமார திசாநாயக்கவுக்கு வாக்களித்த 42 சதவீதமான வாக்காளர்களில் அதிகப் பெரும்பான்மையானவர்கள் ஒரு எதிர்ப்பு வாக்கை பதிவு செய்வதற்கே அவரை ஆதரித்தார்கள். பாரம்பரிய வழியில் வாக்களிப்பதில் தங்களுக்கு எந்த பயனும் இல்லை என்பதை மக்கள் தெளிவாக உணர்ந்து கொண்டார்கள். அபிவிருத்திக் கொள்கை அல்லது ஊழல் ஒழிப்பு தொடர்பில் புதிதாக எந்த திட்டத்தையும் முன்வைக்காதவர்கள் என்று தாங்கள் கண்டுகொண்ட மற்றைய வேட்பாளர்களை மக்கள் நிராகரித்தார்கள். இந்த தடவை பாராளுமன்ற தேர்தலில் நாட்டின் பெரும்பாலான பாகங்களில் மக்கள் நேர்மறையான வாக்கொன்றை அளிப்பார்கள் என்று அரசாங்கம் எதிர்பார்க்கிறது.

**மனங்கள் சந்தித்தல்**

இன, மத சிறுபான்மைச் சமூகங்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற பகுதிகளில் ஜனாதிபதி பெரும்பான்மையான வாக்குகளைப் பெறவில்லை என்பது கவனிக்கத்தக்கது. தேசிய மக்கள் சக்தியின் தலைமைத்துவ கட்சியான ஜே வி.பி. ஆரம்பிக்கப்பட்ட நாளில் இருந்து கடந்த ஐந்து தசாப்தங்களுக்கும் அதிகமான காலமாக இன, மத சிறுபான்மைச் சமூகங்களின் அபிலாசைகளை ஆதரிக்கவில்லை. சிறுபான்மைச் சமூகங்களின் கோரிக்கைகளின் விளைவாக இலங்கையின் ஐக்கியத்துக்கும் சுயாதிபத்தியத்துக்கும் அச்சுறுத்தல் ஏற்படுகிறது என்ற பெரும்பான்மைச் சமூகத்தின் பொதுவான கருத்தையே ஜே வி.பி.யும் கொண்டிருந்தது.

இந்த பழைய மனப்போக்கு செய்த பாதகத்தை ஜனாதிபதி தேர்தலின்போது ஜனாதிபதி திசாநாயக்க ஏற்றுக் கொண்டார். கடந்த காலத்தில் சிறுபான்மைச் சமூகங்கள் பாரபட்சமாக நடத்தப்பட்டதை தெளிவாக விளங்கிக் கொண்டிருக்கிறார் என்பதை வெளிக்காட்டும் வகையிலான உரைகளை அவர் நிகழ்த்தினார். சிறுபான்மைச் சமூகங்களின் வேதனைகளைப் புரிந்துகொண்டவராக அவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வைக் காண்பதற்கு உண்மையான முயற்சிகளை எடுக்கப்போவதாக அவர் சூளுரைத்தார்.



> சிறுபான்மைச் சமூகங்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற பகுதிகளில் தேசிய மக்கள் சக்திக்கு நேர்நிகரான அரசியல் சக்தி தற்போது இல்லை. அதனால் பெரும்பான்மைச் சமூகம் செய்வதைப் போன்று சிறுபான்மைச் சமூகங்களும் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிப்பதில் நாட்டம் காட்டுவதற்கான வாய்ப்பு இருக்கிறது.

புதிய அரசாங்கம் முதல் மூன்று வாரங்களிலும் முன்னெடுத்த நடவடிக்கைகள் தேசிய மக்கள் சக்தி தாங்கள் முன்னர் அறிந்திருந்த ஜே வி.பி. அல்ல என்ற ஒரு நம்பிக்கையை சிறுபான்மைச் சமூகங்களுக்கு கொடுத்திருக்கிறது போன்று தெரிகிறது. அண்மையில் கிழக்கு மாகாணத்துக்கு மேற்கொண்ட விஜயத்தின்போது தமிழ், முஸ்லிம் சிவில் சமூகம், மதத் தலைவர்கள் மற்றும் கல்விமான்களுடன் நடத்திய சந்திப்புகள் நாடு முழுவதையும் தழுவியதாக மனங்களின் சந்திப்பு ஒன்று இடம்பெற்று வருகிறது என்ற எண்ணத்தை எனக்கு ஏற்படுத்தின.

ஒரு மாற்றத்துக்கும் புதிய முகங்களுக்குமான விருப்பம் சகல பிரிவினரிடமும் காணப்படுகிறது. வடக்கு, கிழக்கைச் சேர்ந்த பாரம்பரிய கட்சிகள் மீது மக்கள் வெறுப்படைந்திருக்கிறார்கள். மீண்டும் மீண்டும் தாங்கள் தெரிவுசெய்த அரசியல்வாதிகள் தங்களது வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு தேவையான சேவையைச் செய்யவில்லை என்று அந்த மக்கள் பெரும் அதிருப்தியடைந்திருக்கிறார்கள்.

இன, மத சிறுபான்மைச் சமூகங்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற பகுதிகளில் தேசிய மக்கள் சக்திக்கு நேர்நிகரான அரசியல் சக்தி தற்போது இல்லை. அதனால் பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் செய்வதைப் போன்று சிறுபானமைச் சமூகங்களைச் சேர்ந்த பலரும் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிக்க விரும்பக்கூடிய சாத்தியம் இருக்கிறது.

கடந்த மூன்று வாரங்களில் பொருளாதாரத்தைப் பாதிக்கக்கூடியதாகவோ அல்லது பிரச்சினைகளை தோற்றுவிக்கக்கூடியதாகவோ சர்ச்சைக்குரிய எதுவும் இடம்பெறவில்லை என்பது புதிய கட்சியையும் புதிய தலைவர்களையும் தெரிவுசெய்வதற்கான அவர்களின் விருப்பத்தை வலுப்படுத்தும் எனலாம். கடந்த ஏழு தசாப்தங்களாக மக்களுக்கு பயனுடைய சேவைகளைச் செய்யாதவர்களை நிராகரித்து புதியவர்களை வரவேற்கும் மனநிலை மக்களுக்கு ஏற்படிருக்கிறது.

ஆனால், வேட்பாளர்களை தெரிவு செய்வதில் தேசிய மக்கள் சக்தி பெருளவுக்கு யதார்த்தபூர்வமாக செயல்பட்டிருக்க முடியும். கட்சிக்கு விசுவாசமாக இருக்கின்ற அதேவேளை, வாக்காளர்களுக்கு நன்கு தெரியாதவர்கள் மக்கள் நம்பிக்கை வைக்கக்கூடியவர்களாக இருப்பார்கள் என்று கருதமுடியாது.

**மட்டுப்பட்டுத்தப்பட்ட கலந்தாலோசனை**

கிழக்கில் வெளிப்படுத்தப்பட்ட இந்த அக்கறைகள் கருத்தில் எடுக்கப்பட வேண்டும். தேர்தலுக்காக தேசிய மக்கள் சக்தியினால் முன்வைக்கப்பட்ட வேட்பாளர்கள் தெரிவு தொடர்பில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கலந்தாலோசனைகள் இடம்பெற்றிருந்தன என்று தெரிகிறது. சகல தரப்பினரையும் உள்வாங்கியதாக இல்லாமல் ஒரு பிரத்தியேகமான முறையில் கட்சியின் உயர்மட்டத்தினால் வேட்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்கள் போன்று தோன்றுகிறது.

பாரம்பரியமாக ஜே.வி.பி. வாக்குகளைப் பெறுகின்ற - உறுப்பினர்களைக் கொண்டிருக்கின்ற பகுதிகளில் இது ஒரு பிரச்சினையாக இல்லாமல் இருக்கலாம். அந்த உறுப்பினர்கள் அந்த பகுதிகளின் மக்கள் அறிவார்கள். ஆனால் இன, மத சிறுபான்மைச் சமூகங்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற பகுதிகளில் ஜே.வி.பி. உறுப்பினர்களை பெரிதாக தெரியாது. அதனால் மக்களுக்கு நன்கு சேவை செய்து அவர்களின் அங்கீகாரத்தைப் பெற்ற வேட்பாளர்களை அடையாளம் காண்பதற்கு பரந்தளவில் சிவில் சமூகத்துடன் தீவிரமான கலந்தாலோசனைச் செயன்முறை தேவைப்பட்டிருக்கலாம்.

மேற்கூறப்பட்டது அரசாங்கம் அவசியமாக கையாள வேண்டிய முதலாவது பிரச்சினை என்றால், இன, மத சிறுபான்மைச் சமூகங்களினதும் சர்வதேச சமூகத்தினதும் உறுதியான நம்பிக்கையாக இருந்துவரும் அதிகாரப் பரவலாக்கம் மீதான பற்றுறுதியை வெளிக்காட்ட வேண்டியது இரண்டாவது பிரச்சினையாகும். அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதாக ஜனாதிபதி திசாநாயக்க தனது தேர்தல் விஞ்ஞா பனத்திலும், உரைகளிலும் உறுதியளித்தார்.

எந்தவொரு ஜனநாயகத்திலும் பெரும்பான்மையே ஆட்சிசெய்கிறது. இன, மத அடையாளங்கள் என்று வருகின்றபோது அங்கு தேர்தல் முறைமையினால் சமத்துவமானதாக்க முடியாத நிரந்தரமான பெரும்பான்மையினரும் நிரந்தரமான சிறுபான்மையினரும் இருப்பார்கள். உளளூர் பெரும்பான்மையினரால் தெரிவு செய்யப்படுகின்ற மாகாண அரசாங்கங்களுக்கு அதிகாரங்களை பரவலாக்குவதன் மூலமாக மாத்திரமே தங்களது அபிலாசைகள் மதிக்கப்பட்டு அரவணைக்கப்படுவதாக சிறுபான்மையினரை உணரச்செய்யமுடியும்.

இது விடயத்தில மூன்று கட்டச் செயற்திட்டம் ஒன்று கிழக்கில் உள்ள சிவில் சமூகத்தினால் சிபாரிசு செய்யப்படுகிறது. முதலாவதாக, மாகாணங்களுக்கான மட்டுப்படுத்தப்பட்ட, கட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்களுடன் என்றாலும், மாகாணசபை தேர்தல்களை தாமதமின்றி நடத்துவதன் மூலமாக 13 வது திருத்தத்தை உடனடியாக நடைமுறைப்படுத்துவது. இரண்டாவதாக, அரசியலமைப்பில் இருக்கின்ற போதிலும் கூட இன்னமும் பரவலாக்கம் செய்யப்படாமல் இருக்கின்ற அதிகாரங்களையும் திட்டமிட்ட முறையில் அல்லது புறக்கணிப்பு மனப்பான்மையுடன் மாகாணங்களிடம் இருந்து பறிக்கப்பட்ட அதிகாரங்களையும் மீளக்கையளிப்பது.

மூன்றாவதாக, முன்னெடுக்கப் போவதாக அரசாங்கம் உறுதியளித்திருக்கும் விரிவான அரசியலமைப்புச் சீர்திருத்த செயற்திட்டத்தில் அதிகாரப்பரவலாக்கல் திட்டத்தை மேம்படுத்துவது.

வேறுபட்ட பிராந்தியங்கள் வேறுபட்ட பொருளாதாரத் தேவைகளையும் வாய்ப்புக்களையும் கொண்டிருக்கின்றன என்பதை அங்கீகரித்து அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு புறம்பாக அதிகாரப் பரவலாக்க கோட்பாட்டை பொறுத்தவரை நோர்வேயின் பிரபலமான சமாதான கல்விமான் பேராசிரியர் ஜோஹான் கல்ருங் கூறிய அறிவார்ந்த வார்த்தைகளை கருத்தில் எடுக்கவேண்டியது அவசியமாகும்.

"எமக்கு சொந்தமானவர்கள் சற்று இரக்கமில்லாதவர்களாக இருந்தாலும் கூட அவர்களால் ஆளப்படுவதையே நாம் விரும்புகிறோம்" என்று அவர் விடுதலை புலிகளுடனான போர்க்காலத்தில் இலங்கையில் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈஸ்டர்...

கூறினார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் இதுவரை வெளியிடப்படாத இரு ஜனாதிபதி ஆணைக்குழுக்களின் அறிக்கைகளை ஏழு நாட்களுக்குள் வெளியிடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால் அவற்றை நான் வெளியிடுவேன் என கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் முன்னாள் பாராளு மன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்திருந்தார்.

அறிக்கையை வெளியிடுவதில் அரசாங்கம் ஏன் தயங்குகின்றது என் பதை அமைச்சர் விஜித ஹேரத் வெளிப்படுத்த வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்நிலையில் இது தொடர்பில் ஊடகவியளாலர்களின் கேள்விக்கு பதில் வழங்கிய விஜித ஹேரத்,

“ஒவ்வொரு தனிநபர் கோரிக்கையின் அடிப்படையில் அவற்றை வெளியிட முடியாது.

பொறுப்புள்ள அரசாங்கம் என்ற வகையில், தங்கள் பணிகளைச் சரியாகச் செய்யத் தயாராக உள்ளோம்.

கம்மன்பில கூறுவதை போல அவரின் அறிக்கைகள் தொடர்பில் தாம் கவலைப்படவில்லை”-என்றார். (அ)

## புதிய அரசியல்...

பகிர்வு தொடர்பாக ரில்வின் சில்வா கருத்து தெரிவித்தமை தொடர்பாக நான் கேள்விப்படவில்லை. அவ்வாறான ஒரு கருத்தை ரில்வின் சில்வா சொல்லியிருப்பார் என்று நான் நினைக்கவில்லை.

உண்மையில் நாம் ஒரு அரசியல் கட்சி என்ற வகையில் வடக்கு - கிழக்கு மற்றும் மலையக தமிழ்மக்களுக்கு அரசியல், கலாசார அசாதாரணங்கள் இந்த நாட்டில் ஏற்பட்டதென்று ஏற்றுக் கொள்கின்றோம்.

இலங்கையில் தேசிய ஒற்றுமை இல்லை என்ற பிரச்னை உண்டு.

ஆனால் கடந்த காலங்களில் நாம் சொன்னோம் என பாரிய பொய்களை சொன்னார்கள். முஸ்லிம்கள் தாடி வளர்க்கமுடியாது,பள்ளி செல்லமுடியாது என்றெல்லாம் சொன்னார்கள். நான் நினைக்கிறேன் இந்த கருத்தும் அவ்வாறான ஒன்றாக இருந்திருக்கும்.

இலங்கையில் அனைவருக்கும் சமமான உரிமை உண்டு என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். அது எமது கொள்கைகளிலும் ஒன்று. அடுத்து அனைவருக்குமான நீதி சமமா னதாக இருக்கவேண்டும். புத்தகத்தில் மாத்திரம் அல்ல செயற்பாட்டிலும் அது இருக்கவேண்டும்.

தமிழ் முஸ்லிம் மக்களின் கலாசார உரிமைகள் ஒழுங்காக பாதுகாக்கப்படவில்லை. அதை ஏற்றுக்கொள்கின்றோம். அதனைப் பாதுகாப்பதற்காகவே 13 ஆவது திருத்தம் இந்தியாவால் கொண்டு வரப்பட்டிருந்தாலும் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. ஆனால் தமிழ், முஸ்லிம் மக்கள் நினைக்கின்றார்கள் அந்த சீர்திருத்தம் மாத்திரம் இருந்தால் போதும் என்று.

ஆனால் நாங்கள் புதிய ஒரு அரசியல் யாப்பினை கொண்டு வருவோம். அதனூடாக அனைவரது உரிமைகளும் பாதுகாக்கப்படும். அதுவரை மாகாணசபை முறைமையை பாதுகாப்போம்.அந்த தேர்தலும் நடத்தப்படும்.

கடக்கின்ற ஒரு வருடத்துக்குள் மிகச்சிறந்த விவாதங்களுக்கு பின்னர் பலரது ஆலோசனைகளை பெற்று சரியான ஒரு அரசியலமைப்பு முறையினை இந்த நாட்டில் உருவாக்குவோம்.

அத்துடன் காணாமல் ஆக்கப்பட்ட லலித் குகன் மற்றும் திருகோணமலையில் காணாமல் ஆக்கப்பட்ட மாணவர்கள் தொடர்பாக தற்போதே விசாரணைகளை ஆரம்பித்துள்ளோம். நாங்கள் ஆட்சிக்கு வந்து 3 வாரங்களே ஆகின்றன. எனினும் இதற்கான விசாரணைகளை முன்னெடுத்துள்ளோம். அத்துடன் அரசியல் கைதிகள் அனைவரும் விடுவிக்கப்படுவார்கள் என ஜனாதிபதி ஏற்கனவே தெரிவித்துள்ளார்-என்றார். (அ)

## வியாழேந்திரன்...

குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர்களின் பிரதிநிதித்துவம் பாதுகாக்கப்படவேண்டும் என்பதற்காக இந்த தீர்மானத்தினை எடுத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்காக வியாழேந்திரன் இம்முறை தாக்கல் செய்த வேட்புமனு நிராகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## பிரசித்தமான...

மோசடிகள் தொடர்பில் மீள விசாரணைகளை ஆரம்பிக்குமாறு பதில் பொலிஸ் மா அதிபர் குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு ஆலோசனைகளை வழங்கியுள்ளதாக ரவி செனவிரத்ன கூறினார்.

அவர்களுக்கு இது தொடர்பில் முழுமையான விசாரணைகளை மேற்கொள்ள மேலதிக அதிகாரிகள் தேவையெனில், அவ்வாறான அனைத்து விடயங்களையும் பூர்த்தி செய்ய தயாராக உள்ளதாக அவர் தெரிவித்தார்.

நம்பிக்கையான ஒரு தீர்மானத்தை எதிர்ப்பார்த்து பொறுப்புக்கள் வழங்கப்பட்டிருப்பதால் எந்தவொரு உயர்மட்ட அதிகாரியின் ஈடுபாடுமின்றி அந்த அனைத்து அதிகாரிகளுக்கும் தத்தமது கடமைகளை மேற்கொள்ளக்கூடிய சூழலை தற்போது உருவாக்கியுள்ளதாகவும் அவர் கூறினார்.

அமைச்சர் விஜித் ஹேரத் அனைத்து ஏற்பாடுகளையும் செய்வதோடு விசாரணைகள் உரிய முறையில் இடம்பெறுகின்றதா என்பதையும் அவதானித்து வருவதாக முன்னாள் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் ரவீ செனவிரத்ன வலியுறுத்தியுள்ளார். (அ)

## அனுபவம்...

விக்கிரமசிங்க மக்களிடம் வலியுறுத்தியுள்ளார்.

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலை முன்னிட்டு அவர் விடுத்துள்ள விசேட அறிக்கையிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு வருடங்களாக தன்னுடன் இணைந்து செயற்பட்டவர்கள் நாட்டை முன்னேற்றுவதற்கு மிகவும் பொருத்தமானவர்கள் என அவர் வலியுறுத்தினார்.

பொருளாதார நெருக்கடியை எவ்வாறு கையாள்வது என்பதைத் தெரிந்த தலைவர்கள் பாராளுமன்றத்தில் இருப்பது இன்றியமையாதது. நீங்கள் எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி, அரசாங்கத்தில் அங்கம் வகிப்பவராக இருந்தாலும் சரி, இந்த அனுபவம் இல்லாமல், நாட்டின் இலக்குகளை அடையத் தவறிவிடுவீர்கள்.

அனுபவம் வாய்ந்த எங்கள் வேட்பாளர்களுக்கு வாக்களிக்குமாறு அனைத்து அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்களையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

நாட்டின் பொருளாதாரப் பிரச்னையைத் தீர்த்து முன்னோக்கிச் செல்வதற்கு அனுபவமுள்ளவர்கள் பாராளுமன்றத்தில் இருக்க வேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்தார்.

நாட்டின் எதிர்காலம் பொருளாதாரப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கும் தேசத்தின் மீட்சியை உறுதி செய்வதற்கும் சரியான திறன்களைக் கொண்ட தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதில் தங்கியுள்ளது என்று அவர் வலியுறுத்தினார்.

“என்னுடன் பணியாற்றிய எம்.பி.க்கள் மற்றும் ஐ.தே.க நிர்வாகிகளில் ஒரு பகுதியினர் இப்போது ‘புதிய ஜனநாயக முன்னணி’யின் கீழ் இந்தத் தேர்தலில் இணைந்து கொண்டுள்ளனர். அவர்களின் அனுபவம் மற்றும் அர்ப்பணிப்புடன், இந்த புதிய பாராளுமன்ற பதவிக்காலத்தின் வெற்றியை உறுதி செய்வார்கள்” என அவர் மேலும் கூறினார். (அ)

# புதுக்குடியிருப்பு நகர்ப்பகுதியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள்

புதுக்குடியிருப்பு, ஒக். 18

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு நகர்ப் பகுதியில் நேற்று டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு மற்றும் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

புதுக்குடியிருப்பு பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் ஏற்பாட்டில் சுகாதார வைத்திய அதிகாரி பி. சத்தியரூபன் தலைமையில், புதுக்குடியிருப்பு பிராந்திய சுகாதார பணிமனை உத்தியோகத்தர்கள் மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச சபையினருடன் இணைந்து, துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அத்தோடு, பரிசோதனை நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட்டது.

இதன் போது, டெங்கு நோய் பரவக் கூடிய இடங்கள் இனங்காணப்பட்டு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

துப்புரவு செய்யப்படாத காணிகள், வெற்றுக் காணிகள், கடைகளின் உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

இந்த விழிப்புணர்வு நடவடிக்கையில், முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய தொற்று நோய் வைத்திய அதிகாரி வி. விஜிதரன், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சமுர்த்திப் பயனாளர்கள், சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், புதுக்குடியிருப்பு பொலிஸார், ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (எ)

# பொலிஸ் அதிகாரிக்கு இலஞ்சம் சந்தேக நபர் கொழும்பில் கைது

கொழும்பு, ஒக். 18

இலஞ்சம் கொடுக்க முயன்ற நபரை மட்டக்குளி பொலிஸார் கைது செய்துள்ளனர். நேற்று முன்தினம் மட்டக்குளி பொலிஸ் நிலையத்தின் பதில் பொறுப்பதிகாரிக்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அந்த பொலிஸ் பகுதியில் போதைப்பொருள் கடத்தலை மேற்கொள்ள சந்தர்ப்பம் வழங்குமாறு கோரியுள்ளார்.

சந்தேக நபர் மாதாந்தம் ஒரு இலட்சம் ரூபாய் இலஞ்சமாக வழங்க விரும்புவதாகவும் பதில் பொறுப்பதிகாரிக்கு கூறியுள்ளார்.

இது தொடர்பில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு பதில் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார்.

இதன்படி பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி, சந்தேகநபரை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துள்ள நிலையில், சந்தேக நபர் 50 ஆயிரம் ரூபாவை அவருக்கு வழங்க முற்பட்ட போது, இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகளால் அவர் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மட்டக்குளி பிரதேசத்தை சேர்ந்த 50 வயதுடையவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## பாராளுமன்ற...

என்று தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இவ்வாறான கணிப்புகளை வெளியிடுவோருக்கு எதிராக வழக்குத் தொடரப்படும் என தேர்தல் ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (அ)

## புதிய...

பதவியேற்ற தன் பின்னர் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன்கள் அதிகரித்துள்ளதாக சிலர் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள அவர்,

அரசாங்கத்திற்கு அதன் அன்றாட அத்தியாவசியச் செலவுகளைச் சமாளிக்கவும், சேவைகளை இயக்கவும் நிதி தேவைப்படுகிறது. ஒவ்வொரு வாரமும், மத்திய வங்கி திறைசேரிப் பத்திரங்கள் மற்றும் பிணைமுறிகளை விற்பனை செய்வதன் ஊடாக நிதியை திரட்டுகிறது. உரிய திகதியில் திருப்பிச் செலுத்தல்களும் இடம்பெறுகிறது. இது ஒரு சாதாரண செயல்முறை.

அரசாங்கம் புதிதாக கடன்களை பெறவில்லை. வழக்கம் போல், நிதி சேகரிப்பு மட்டுமே நடைபெறுகிறது. இதனை தவிர, உள்ளூர் நிதிச் சந்தையில் சிறப்பு, விசித்திரமான அல்லது அசாதாரணமான நிதி சேகரிப்பு எதுவும் செய்யப்படவில்லை.

ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ள படி நாங்கள் உள்ளூர் அல்லது வெளிநாட்டு நிதிச் சந்தைகளில் கடன்களை பெறவில்லை. நிதிச் சந்தையை ஸ்திரப்படுத்துவது இலங்கை மத்திய வங்கியின் பொறுப்பாகும். கடந்த அரசாங்கத்தின் காலத்தில் கோரிக்கை விடுக்கப்பட்ட சில நிதிகள் திறைசேரிக்கு வருகின்றன- என்றார். (அ)

## தீர்க்கப்படாத...

அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

இதன்படி, 0112 - 354 550, 0112 - 354 354 அல்லது 0114 - 354 354 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன.

மக்களுக்கு நிலவும் தீர்க்கப்படாத பிரச்னை களை 24 மணி நேரமும் அறிவிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாடு...

சிறு மற்றும் நடுத்தர ஆலை உரிமையாளர்களும் விலையை அதிகரித்துள்ளனர்.

இதன்படி, சந்தையில் கீரிச் சம்பா தவிர்ந்த ஏனைய அரிசி வகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவி வருவதாகக் குறிப்பிட்டுள்ளது.

தற்போது சந்தையில் ஒரு கிலோ கிராம் அரிசி 210 ரூபாய் முதல் 230 ரூபாய் வரை விற்பனை செய்யப் படுவதாக வர்த்தகர்கள் கூறுகின்றனர்.

எனினும், ஒரு கிலோகிராம் நாடு அரிசி 220 ரூபாவுக்கும், சம்பா அரிசி 230 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுவதாகச் சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (அ)

## யாழில்...

குறித்த பெண் கணவனை பிரிந்து வாழ்ந்து வருவதுடன், யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரியிலும் ஊழியராக கடமை புரிந்து வருகின்றார். இந்நிலையில் தனக்கு காய்ச்சல் என தெரிவித்த பெண் கடந்த 11ஆம் திகதி வீடு திரும்பியுள்ளார்.

அவர் நேற்று வீட்டில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சடலம் மீது மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனைகளின்போது நிமோனியா தொற்று ஏற்பட்டதன் காரணமாக அவர் இறந்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார் உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (அ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

# பாராளுமன்ற தேர்தல் குறித்து இதுவரை 257 முறைப்பாடுகள்!

கொழும்பு, ஒக். 18

பாராளுமன்றத் தேர்தல் தொடர்பாக இதுவரை 257 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த செப்ரெம்பர் மாதம் 26 ஆம் திகதியிலிருந்து நேற்று முன் தினம் வரையிலேயே இந்த முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

இவற்றில், வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக இதுவரையில் எந்த முறைப்பாடுகளும் பதிவாகவில்லை. தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பாக 257 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. அந்த வகையில் நேற்று முன் தினம் பிற்பகல் 4.30 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணித்தியால காலப்பகுதியில் 51 சட்ட மீறல்கள் குறித்த முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ)

# ஆட்சிக்கு வந்து 3 வாரத்தில் 52 ஆயிரம் கோடி ரூபா கடன்

## என்ன செய்தது அரசு என்கிறார் லங்கா ஜனதா கட்சியின் தலைவர்



கொழும்பு, ஒக். 18

அரசாங்கம் 52 ஆயிரம் கோடி ரூபாய் கடனை பெற்று என்ன செய்துள்ளது என லங்கா ஜனதா கட்சியின் தலைவர் அக்மீமன தயாரத்தன தேரர் கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கம் ஆட்சிக்கு வந்து மூன்று வாரங்கள் கடந்துள்ளன. இத்தகைய பின்னணியில் அரசாங்கம் 52 ஆயிரம் கோடி ருபாய் கடனை பெற்றுக்கொண்டுள்ளது. 52 ஆயிரம் கோடி ருபாய் பணத்தை பெற்றுக்கொண்டு அரசாங்கம் என்ன செய்துள்ளது என வினவ விரும்புகின்றோம்.

நாட்டு மக்களிடம் சூறையாடப்பட்ட பணம் உகண்டாவில் இருப்பதாக கூறினர். அதேபோன்று தாம் ஆட்சிக்கு வந்தவுடன் அந்த பணத்தை நாட்டுக்கு கொண்டு வர நடவடிக்கை எடுப்போம் என கூறினர். குறைந்த பட்சம் உகண்டாவில் உள்ள பணத்தையேனும் நாட்டுக்கு கொண்டு வந்திருக்கலாம் அல்லவா-என்றார். (அ)

# கண்டியில் கெஹெலியவின் பெயரில் ஆரம்ப பாடசாலை

## பெயரை மாற்றுமாறு மத்திய மாகாண ஆளுநர் உத்தரவு

கொழும்பு, ஒக். 18

கண்டி, குண்டசாலையில் உள்ள கெஹெலிய ரம்புக்வெல ஆரம்பப் பாடசாலையின் பெயரை மாற்றுமாறு, மாகாண ஆளுநரினால் உத்தரவிடப்பட்டுள்ளது.

கண்டி, வத்தேகம கல்வி வலயத்திற்குட்பட்ட குண்டசாலையில் கெஹெலிய ரம்புக்வெலவின் பெயரிலுள்ள ஆரம்பப் பாடசாலையின் பெயரை மாற்றுமாறு, மத்திய மாகாண ஆளுநர் எஸ். பி. எஸ் அபயகோன் உத்தரவிட்டுள்ளார்.

முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல மீது ஊழல் குற்றச்சாட்டு காணப்படும் நிலையில் கண்டியில் உள்ள பாடசாலைகளில் ஊழல் அரசியல்வாதிகளின் பெயர்களை நீக்குமாறு பொதுமக்கள் விடுத்த கோரிக்கையை அடுத்து மாகாண கல்வி திணைக்களத்தின் கட்டமைப்பு குழுவினால் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தெல்தெனியவிலுள்ள மினிப்பே கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளின் பெயர்களை மாற்றுமாறும் மத்திய மாகாண ஆளுநர் உத்தரவிட்டுள்ளார். (அ)

# 5 மில்லியன் டொலரை எனக்கு இலஞ்சம் வழங்க தொழிலதிபர் ஒருவர் முயன்றார்!

## சந்திரிகா வெளியிட்ட பரபரப்பு தகவல்

கொழும்பு, ஒக். 18

**"நான் பிரதமராக இருந்த காலத்தில் சிங்கப்பூரைச் சேர்ந்த தொழிலதிபர் ஒருவர் ஒரு திட்டத்துக்காக எனக்கு 5 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலஞ்சமாக கொடுக்க முயன்றார்." - இவ்வாறு பரபரப்பு தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க.**

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே முன்னாள் ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

ஊழலுக்குப் பழக்கப்பட்ட பெரியவர்களின் மனதை மாற்றுவது சாத்தியமில்லை என இதன் போது தெரிவித்த அவர், சிறு வயதிலிருந்தே விழுமியங்களை வடிவமைக்கவேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எங்களிடம் ஒரு ஜனாதிபதி இருந்தார். அவர் உங்களால் முடிந்த வரை திருடுங்கள், ஆனால் பிடிபடாதீர்கள் என அவர் தனது அமைச்சரவையில் தெரிவித்தார். இதை அவர் தனது பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி உறுப்பினர்களிடமும் கூறி வந்தார்.

எல்லோரும் திருடினார்கள், யாரும் கைது செய்யப்படவில்லை.

இந்த அமைப்புதான் எமது நாட்டை சீரழித்துள்ளது.

தொழிலதிபர்கள் திட்டங்களைப் பாதுகாக்க இலஞ்சம் கொடுக்கலாம் என்றாலும், பரவலான ஊழல் இறுதியில் தேசிய வங்குரோத்து நிலைக்கு இட்டுச் செல்லும் - என்றார். (அ)

# வலிவடக்கு பகுதி மக்களை நேற்று சந்தித்த தேசிய மக்கள் சக்தியினர்

## விடுவிக்கப்படாத பகுதிகளை உடன் விடுவிக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 18

வலிகாமம் வடக்கு மீளக்குடி யேறாத மக்களின் அழைப்பை ஏற்று தேசிய மக்கள் சக்தியின் பிரதி நிதிகள் நேற்று அங்கு சென்றிருந்த னர். நேற்றுக் காலை பலாலி வடக்கு ஆரோக்கியமாதா தேலாயல மண்டபத்தில் தேசிய மக்கள் சக்தி யின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகரன் தலைமையிலான குழுவினர் மக்களைச் சந்தித்து கலந்துரையாடினர். இதன் போது, கொழும் பில் உள்ள வீதிகளை மக்களின் போக்குவரத்துக்காக திறந்துவிட்டுள்ள ஜனாதிபதி எங்கள் மக்களின் காணிக ளையும் தேர்தலுக்கு முன்னர் விடுவித்து தரவேண்டும் என அருட்தந்தை தேவ ராஜன் கோரிக்கை விடுத்திருந்தார். குறித்த கலந்துரையாடலில் உரையாற்றிய தேசிய மக்கள் சக்தியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகரன், இராணுவத்தின் வசமுள்ள மக்களுடைய காணிகள் விரைவில் விடிவிக்கப்படும் என உறுதி வழங்கினார்.

குறித்த சந்திப்பில் அருட் தந்தையர்கள், விடுவிக்கப் படாத காணி உரிமையாளர்கள், தேசிய மக்கள் சக்தியின் யாழ்.மாவட்ட வேட்பாளர்கள் என பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மகாஜனவில் ஓவியக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஒக். 18

யா/மகாஜனக் கல்லூரி மாணவர்களின் கைவண்ணத்தில் உருவான ஓவியக் கண்காடசி இன்று வெள்ளிக் கிழமை தொடக்கம் 20.10.2024 ஞாயிற்றுக்கிழமை வரை காலை 9.00 மணி தொடக்கம் மாலை 5,00 வரை மகாஜனக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்த ஓவியக் கண்காடசி பாடசாலை மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும். இக்கண்காட்சியை யாவரும் குறித்த நேரத்தில் கண்டுகளிக்கலாம் என்று கல்லூரிச் சமூகத்தினர் தெரிவித்துள்ளனர்.

# இலங்கைப் பெருங்கடலை மாசுபடுத்திய 26 கப்பல்கள்!

கொழும்பு, ஒக். 18

கடந்த ஒரு வருடத்தில் 26 கப்பல்கள் இலங்கைப் பெருங்கடலை மாசுபடுத்தியுள்ளதாக கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

பிரான்ஸ் அரசுடன் இணைந்து செயற்கைக்கோள் தொழில்நுட்பம் மூலம் தொடங்கப்பட்ட கண்காணிப்பு திட்டத்தின் தரவுகளின் அடிப்படையில் இந்த விடயங்களை ஆணையம் வெளிப்படுத்தியுள்ளது.

அண்மைக்கால வரலாற்றில், இலங்கைப் பெருங்கடலுக்கு கடுமையான சேதத்தை ஏற்படுத்தியது எக்ஸ்பிரஸ் பேர்ள் மற்றும் நியூ டயமண்ட் ஆகிய கப்பல் விபத்துக்கள் ஆகும்.

நியூ டயமண்ட் கப்பல் 2020 செப்ரெம்பரில் இலங்கையின் கிழக்கு கடற்கரையிலிருந்து 38 கடல் மைல் தொலைவில் தீ விபத்துக்குள்ளாகி மூழ்கியது.

மேலும், 2021 மே மாதம் சிங்கப்பூரில் பதிவு செய்யப்பட்ட எக்ஸ்பிரஸ் பேர்ள் என்ற கப்பல் கொழும்பு துறைமுகத்துக்கு அருகில் உள்ள கடலில் தீப்பிடித்து மூழ்கியது.

இந்த கப்பல் விபத்துக்கள் காரணமாக இலங்கையின் கடல் சுற்றுச்சூழலுக்கு கடுமையான மற்றும் நீண்டகால சேதம் ஏற்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இவ்வாறான கடல் சூழல் மாசுபாடு விபத்துக்கள் இடம்பெற்ற சூழலில் பிரான்ஸ் அரசாங்கத்தின் உதவியுடன் இலங்கை கடற்பரப்பில் செயற்கைக்கோள் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் எரிபொருள் கசிவுகளை ஆராய கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபை மற்றும் பிரான்ஸ் நிறுவனத்தினால் முன்னோடித் திட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

அங்கு பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் கடந்த ஓராண்டில் இலங்கைப் பெருங்கடலுக்குள் நுழைந்த 26 கப்பல்கள் இலங்கைப் பெருங்கடலை மாசுபடுத்தியுள்ளதாக தெரியவந்துள்ளது. (அ)

# பரீட்சை வினாத்தாள் கசிவு மோசடியை தடுக்க ஏற்பாடு!

## புதிய முறை பின்பற்றவுள்ள பரீட்சைகள் திணைக்களம்

கொழும்பு, ஒக். 18

இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் எதிர்காலத்தில் அரை தானியங்கி முறையில் (semi-automatic method) பரீட்சை வினாத்தாள்களை உருவாக்கும் புதிய முறையை பின்பற்றவுள்ளதாக, பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் வினாத்தாள்கள் கசிவு போன்ற மோசடிகள் குறையுமென்றும், வினாத்தாள் தயாரிப்பில் தனிநபர்களின் பங்களிப்பைக் குறைத்து, அரை தானியங்கி முறையில், கணினி மயமாக்கப்பட்ட முறையில் வினாத்தாள் உருவாக்கம் மேற்கொள்ளப்படுமென்றும் அவர் கூறினார்.

இந்த புதிய முறையின் கீழ், மோசடி மற்றும் ஊழலை குறைப்பதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.புதிய கல்வி சீர்திருத்தங்களால், வினாத்தாள்கள் தயாரிக்கும் பணியில் பெரிய மாற்றம் ஏற்பட்டுள்ளதாகவும், அதன் விளைவாக இந்த புதிய முறைகள் பின்பற்றப்படுமென்றும் அவர் கூறினார்.

பரீட்சை வினாத்தாள் தயாரிக்கும் பணியை தனி நபர்களை கொண்டு மேற்கொள்ளும் வரை, நூறு வீதம் மோசடி மற்றும் ஊழலை தவிர்க்க முடியாதெனவும் அவர் தெரிவித்தார்.

இலங்கைப் பரீட்சை திணைக்களத்தின் பொறிமுறையில் கடந்த காலங்களில் வினாத்தாள்கள் கசிந்தமை ஒரு பிரச்னையாக இருக்கவில்லை. தனிப்பட்ட நபர்களின் நம்பிக்கை தொடர்பான பிரச்னையே பரீட்சை வினாத்தாள்கள் கசிந்தமைக்கான காரணமெனவும் அவர் குறிப்பிட்டார்.

1968 ஆம் ஆண்டு 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் விதிகள் மற்றும் குற்றவியல் சட்டக் கோவையின் விதிகளின்படி, பரீட்சை மோசடியில் ஈடுபட்ட நபர்களுக்கு தண்டனை மற்றும் பிடியாணை இன்றி கைது செய்யும் அதிகாரமும் வழங்கப்பட்டுள்ளது. பொதுப் பரீட்சைகள் சட்டம் முழுக்க முழுக்க கிரிமினல் குற்றங்களைக் குறிப்பிடும் சட்டமாகும் என்றும் அவர் கூறினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 18.10.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.